உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௰௫ { பிரமாதி, ஐப்பசி } மலர் எ


க. பழமளித்த பாவையார் 245
திரு. அ. சிதம்பரநாதச்செட்டியார் அவர்கள் M. A.

உ. உயர்திரு ஞானியார் அடிகளாரின்
பொன்விழாவில் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார்
கூறிய வாழ்த்துக்கள் 253

ங. பொன்விழாப் பாராட்டுரைகள் 255
I. திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்
II. ஔவை. திரு. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்
III. திரு. க. வெள்ளைவாரணன் அவர்கள்

ச. பொன்விழா நிகழ்ச்சி 273
வித்துவான் திரு. வீர. அரங்கன்

ரு. இலக்கணப் புலவர்
ம. நா. சோமசுந்தரம்பிள்ளை அவர்களின்
தமிழ்த் தொண்டு 278
திரு. நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள்

சு. தமிழ்ச்செய்திகள் 283
எ. புத்தக மதிப்புரை 287
அ. நன்கொடைகள் 288
பொழிற்றொண்டர்



பொழிற்றொண்டர்:
செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௫ | பிரமாதி, ஐப்பசி | மலர் ௭

## பழமளித்த பாவையார்

திரு. அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள் M.A.
தமிழ் விரிவுரையாளர், அண்ணுமலைநகர்

நல்ல நறுமாங்கனிகள் இரண்டு தம் கணவன் இல்லின்கண் வைப்பித்தவற்றுள் ஒன்றினை இறைவனடியாரொருவருக்குப் படைத்துவிட்டு, இல்லெய்திய கணவனுக்கு எஞ்சியிருந்த பழமொன்றை அளிக்க, அவன் மற்றொன்றும் விரும்பிக் கேட்க, இறைவனருளால் வேறோர் அதிமதுர மாங்கனி பெற்றளித்த பெரியார் காரைக்காலம்மையார் என்று வழங்கப்படுபவர். அவர் காரைக்காலிற் பிறந்து சிறந்தமையாலும், பின்னுளில் உமைகேள்வனுல் "அம்மையே" என்று அழைக்கப் பட்டமையாலும், அப்பெயர் பெற்றுரேனும், இளமையின் கண்ணே அன்னுருடைய தாய்தந்தையரால் புனிதவதியார் என்ற பெயரானே போற்றப் பட்டார். அவர் பொங்கிய பேரழகு மிக்கவர்; அழகின் கொழுந்து எழுவதென வளர்ந்தவர்; நல்லன என்று உறுப்பு நூலவர் உரைக்கும் நலமெல்லாம் நிரம்பியிருந்தவர்; வெறி மலர்மேல் வீற்றிருக்கும் திருவை ஒத்தவர்; மென்சாயலால் மயிலையும் புறங்கொளச்செய்பவர். எனின் அவரைப் பாவையார் எனல் பொருந்தும்.

இப்பாவையார் வரலாற்றை இனிக் காண்போம். வளம் பல மல்கிய காரைக்காலில் பெருவணிகர் தம் தலைவராய்

இலங்கிய தனதத்தனார் என்பவரின் அருமைத் திருமகளாய்த் தோன்றினார் புனிதவதியார். இளமைதொட்டே சிவனிடத்துப் பேரன்பு பூண்டு விளையாட்டிலும் அவன் கழலே நினைந்து வந்தார். நாகையம்பதியில் வாழ்ந்துவந்த நிதிபதி என்ற பெரு வணிகன் பயந்த மைந்தன் பரமதத்தன் என்பானுக்கு உரிய வயதில் திருமணஞ்செய்து கொடுக்கப்பட்டார். தம் குடிக்கு ஒரே மகளாதலின் தனதத்தனார் அவரை நாகைக்கு அனுப் பாராய்த் தம் இல்லத்தின் மருங்கே நல்லதொரு வீடமைத்து அதன்கண் கணவனோடு இருக்குமாறு செய்தார். புனிதவதி யாரும் பரமதத்தனும் இல்லறத்தை இனிது நடத்திவருநாளில், ஒரு நாள் பரமதத்தன் பெற்ற மாங்கனிகள் இரண்டையும் இல்லத்திற்கு அனுப்பினான். அவற்றை மாதரார் வாங்கிவைத்த பின், துவரப் பசித்தாரொருவர் மனையினுள்ளே புகுந்தார். அவர்க்குப் புனிதவதியார் சோறும் மாங்கனிகளில் ஒன்றும் படைக்க அவர் உண்டு உவந்து போனார். வீடுதிரும்பிய பரம தத்தனுக்கு இன்னடிசிலும் கறியும் மாங்கனியும் அளிக்க, அவன் மற்றொருபழத்தையும் விருப்பிக் கேட்டான். சற்று அயர்ந்த பின், அவர் சிவனைச் சிந்தையிற் கொண்டு உணர்தலும், அவனருளால் அதிமதுரக் கனியொன்று அவர் கைம்மருங்கே வந்திருந்தது. அதனையும் கணவனுக்குஅளிக்க, அவன் அதனை யாண்டுப் பெற்றனை என்று வினவ, சொல்ல மாட்டாதவராய்ச் சிறிதுநேரம் தயங்கிய நங்கையார் அதுபுகுந்தவிதம் உரைத்தார். "அருளாற் பெற்றதெனின், மற்றுமொன்று பெற்றளிப்பாய்" எனக் கணவன் கூற, புனிதவதியார் ஒதுங்கிநின்று இறைவனைப் பரவி இன்னும் ஒரு கனிவாங்கிக் கொடுத்தார். வியப்புற்றுப் பெற்ற கணவன் கையிற் கனியைக் காணானாய் அஞ்சித்தடுமாறி மனைவியை நீங்கும் துணிவுகொண்டான். பின், பொருளீட்டுவான் போவதாகச்சொல்லிப் பிரிந்துபோனான். பொன்னிநாடு நீங்கிக் கடலிற் சென்றவன் பொருள் திரட்டிய பிற்பாடு கன்னி நாட்டின்கண் ஒருபட்டினம் சேர்ந்தானாக, ஆண்டு ஒரு வணிகக் கன்னியை வதுவைசெய்துகொண்டான். பிறந்த பெண்மகவுக்குத் தனது மூத்தமனைவியின் பெயரையே இட்டான். மனையறத்தைக் கற்போடும் பேணிவந்த புனிதவதியாரின் சுற்றத்தார் அவன் பாண்டிநாட்டுப்பதியொன்றில் வாழ்ந்து வந்தமையறிந்து அவண் திருமகளாரைக் கொண்டு சேர்க்கப் புறப்பட்டனர். அவர் வருவதைக் கேள்வியுற்ற கணவன் அச்சமுற்றுத் தானே முந்துறச்சென்று மறுமனைவியோடும் மகவினோடும் மனைவியார் அடியில் வணங்கித் தன்னிலையை யுணர்த்த, மனைவியாரும்

அவனுக்காகத் தாங்கியிருந்த தசைப் பொதியைக் கழிக்க எண்ணங்கொண்டார். இறைவனை வேண்டியவாறே, பேய்வடிவு அருளப் பெற்றார். கண்ட சுற்றத்தார் அஞ்சி அகன்று போயினார். பின், பேயார் "அற்புதத்திருவந்தாதி", "இரட்டை மணிமாலை", ஆகியவற்றைப் பாடி அண்டர் நாயகனைப் பரவியேத்திக் கைலைமலையின் மருங்குஅணைந்தபின்,காலால்நடப்பதை விட்டுத் தலையினால் நடந்து சென்றார். அந்த எலும்புடம்பின் அன்பை இமயவல்லி வியந்து கூற, இறைவனும் " வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் ", என இயம்பினான். அருகே வந்த புனிதவதியாரை நோக்கி இறைவன் " அம்மையே " என, அவர் " அப்பா " எனஅழைக்க " நம்பால் வேண்டுவது என்ன", என்று சிவன் கேட்க, அம்மையார் இறவாத இன்பஅன்பும், பிறவாமையும், சிவனை மறவாமையும், அவனது அடிப்பேறும் வேண்டி நின்றார். திருவாலங்காட்டில் திருநடனம் காணுமாறு பணிக்கப் பட்டு அவ்வூர்சேர்ந்த அம்மையார், "மூத்த நற்பதிகம்" பாடி அத்தன் ஆடல் கண்டு மகிழ்ந்தார். அப்பன் எடுத்தடும்சேவடிக்கீழ் என்றும்இருக்கின்றஅவரதுவரலாற்றை ஒருவாறு கண்டோம். இனி, இப்பாவையாரும் பரமதத்தனும் ஒன்றிவாழ முடியாது போனமைக்குரிய காரணங்களை ஆராய்வோம்.

இளமைதொட்டே இறைவன்பால் அளவில்லா மனக்காதல் பூண்டு, மொழிபயின்ற பின்னெல்லாம் அண்டர்பிரான் திருவார்த்தையே வண்டலிலும் பயின்றுவந்த பாவையார், மணமான பின்னரும் இறைவனிடத்து, " ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றிச் " செலுத்திவந்தார். தாய்தந்தையர் தம்மைப் பரமதத்தனுக்குக் கொடுத்து விட்டமையால் அவனோடு வாழ வேண்டுவது கடனாகும் என்ற எண்ணத்தால் அவனோடு இல்லறத்தைநடத்திவந்தாரேயன்றிக் கணவன்பால் காதல்மிகப் பெருக வாழ்ந்து வந்தாரல்லர் எனத்தோன்றுகிறது. அதற்கு மாறாக, அவர் கணவனோ மனைவியிடத்து மிக்க காதல் கொண்டிருந்தான் எனத் தெரிகிறது. பாவையாருடைய "தணிவில்பெரு மனக்காதல்" சிவன் பாலதாக, பரமதத்தனுடைய "தகைப்பில் பெருங்காதல் மனைவியின் பாலது. காமம் பெரிதுடையான் பரமதத்தன் என்பதைக் காட்ட வேண்டியே போலும் அவனைக் " **காளை** " எனக் குறிப்பிட்டார் சேக்கிழார். தாதவிழ்தார்காளைக்குக் கல்யாணஞ்செய்தார்கள்". அவனினும் மேலான ஒருவன்பால் பாவையாரின் மாசற்ற காதல்

வாய்ந்திருந்தது என்பதைக் காட்டும் பொருட்டே, சேக்கிழார் பரமதத்தனை "இல்லிறைவன்", "மனைவாழ்பதி" என்றவாறு குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பான் அறியப்படுவது அவனின் வேறுபடேதோர் இறைவனுகியபதி அவர்சிந்தையிற் செறிந்துளான் என்பது. சிவனடியார் ஒருவர் உண்ண வந்தக்கால் அவரைக் கண்ட பாவையார் "நாதன்றன் அடியாரைப் பசி தீர்ப்பேன்" என நண்ணியதாகச் சொல்லப்பட்டிருப்பதால் இது வலியுறுகின்றது.

இறைவனிடத்தேயன்றி, இறைவனடியார்மாட்டும் பாவையார் பேரன்பு பூண்டவர். அடியவர்க்கு அன்பில்லார் ஈசனுக்கு அன்பில்லார் என்ற கொள்கையுடையர் அவர் எனத்தெரிகிறது. தந்தை தனதத்தனேடு இருந்த நாட்களில் தொண்டர்வரின் பாவையார் தொழுது வந்தாரென்றும், மனையறத்தில் தலைப்பட்ட பிற்பாடும் அடியார்வரின் திருவமுதளித்துச் செம்பொன்னும் நவமணியும் செழுந் துகிலும் முதலானவற்றைப் பரிவொடு கொடுத்து வந்தாரெனவும் அறிகிறோம். பரமதத்தனே சிவனடியாரைப் போற்றியதாகக் காணப்படவில்லை. சிவனடியார் வந்து உண்டனரா எனக் கேட்டறிந்து அதன்பின் உண்டாதாகவுங் கூறப்படவில்லை. சிவனடியார்க்கு ஏன் கொடுத்தாய் என்று அவன் கேட்டலுங்கூடும் என்ற கருத்தானே போலும் பாவையார் பழமொன்றை முன்னர் அடியார்க்கு இட்டு விட்டமையைக் கூற அஞ்சி அயர்ந்தார்! அதுகாறும் அவர் அடியாருக்கு அளித்துவந்த பொருளெல்லாம் தந்தையால் தமக்குரியவாகக் கொடுக்கப்பட்டிருந்த பொருளிலிருந்தே யாதலாலும், இப்பொழுதுதான் கணவனுடைமையினின்று ஒன்று கொடுத்துள்ளமையாலும்போலும் அவன் யாது கூறுவானே என அஞ்சினர் என்று நினைக்க இடமுண்டு.

அடியார்பால் பரமதத்தன் அன்பிலனெனினும், அவனை சிவனடியாருள்வைத்து எண்ணத் தக்க ஒழுக்கமுடையவனுயிருப்பின் பாவையார் அவனை நன்று போற்றியிருப்பர். அங்ஙனம் இல்லாதிருந்தமையான், சிவனடியாரைப் பரிவோடும் மகிழ்வோடும் உண்பித்த பாவையார் கணவனைக் கடப்பாட்டிலேயே ஊட்டினர். இதனை "அடியார்தமை மனமகிழ்ச்சியினுல் அமுது செய்வித்தார்" என்ற சேக்கிழார் சொற்களாலும், "மனைப் பதியாகிய வணிகனைக் கடப்பாட்டில் ஊட்டுவார்" என்ற சொற்களாலும் அறிக.

நினைவிலும் கனவிலும் விளையாட்டினும் எப்போதும் சிவனையே புனிதவதியார் வழிபட்டு வந்தாராக, அத்தகைய ஒருமனப்பாடு உடையனல்லன் பரமதத்தன் எனத் தோன்றுகிறது. கடலில் மரக்கலத்தில் ஏறிச் செல்லலுற்றவன் "சலந்தரு கடவுட் போற்றிச்" சென்றான் என்று சொல்லப்பட்டுளது. கடவுளை வழிபடுவதெனின், நீரின்கண் இந்திரனையும், நிலத்தின்கண் வேறு கடவுளையும் வழிபடுகின்ற இவனியல்பு புலனாகின்றது. அம்மையாரோ மலைமேல் ஏறும்போதும், வடதிசைக் காட்டு வழிச் செல்லுங்காலும் சிவனொருவனையே போற்றிச் சென்றார். மலைக்குரிய கடவுளெனவும் காட்டிற்குரிய கடவுளெனவும் வெவ்வேறு கடவுளரைக் கருதவே யில்லை. இவ்விருவரிடை காணப்படும் இவ்வேற்றுமை அவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட இடையூறா யிருந்ததென்று திண்ணமாய்க் கூறலாம்.

புனிதவதியார் பிறநலம் பேணுபவராகவும் கணவன் தன்னலமே பேணுபவனாகவும் இருந்தமை இன்னுமோர் இடையூறென்க. நல்ல நறு மாங்கனிகள் இரண்டையும் தம் கையாலே எடுத்து இல்லத்தின்கண் வைத்தக்காலும், அவற்றுளொன்றை எடுத்துத் தங்கையால் அடியாருக்குப் படைத்தக்காலும், அவருண்பதைக் கண்டிருந்தாலும் நங்கையாருடைய மனம் மாங்கனிபால் சென்றதாகத் தெரியவில்லை. அதற்குமேலும், எஞ்சியிருந்த கனியொன்றையும் தன்கையாலெடுத்துக் கணவன் கேளாமலே முழுதும் படைத்துவிட்டார். இச்செயல்களால் அவர் தன்னலமற்றவர் என்பது வெளியாகும். ஆனால் பரமதத்தன் கனியொன்றை நுகர்ந்தபின் "இனையதொரு பழம் இன்னும் உளது, அதனை இடுக" என்று கூறினான். இன்னொன்று இருக்கவேண்டியதில் தனக்கு ஒருபாகம் தருக என்றுதானும் அவன் கேட்டானல்லன். முழுதும் இடுமாறு வேண்டியவன் மற்றோர் அருமையான கனி கிடைக்கப் பெற்று உண்டபின்னும் சோதனைக்காகக் கேட்டுப்பெற்ற மூன்றாங்கனியையும் முற்றும் அயின்றிருப்பான், அது மறையாதிருக்குமாயின். இதனால் அவன் தன்னலமே பேணுபவன் என்பது புலப்படும். முன் வந்து உண்டுபோன அடியவர் சோறுங்கனியுமே அருந்தி உவந்துசென்றாராக, அவன் சோறுங், கறியும், கனியும் உண்டும் ஆராமை மேலீட்டால் மற்றுமோர் கனியும் பிறிதோர் பழமும் தனக்கே விழைந்து விழைந்து வேண்டினன் எனின், அவன் தன்னலங் குடிகொண்டவன் என்று கூறுதல் மிகையாமா?

புனிதவதியார் பொய்யாமையறத்தைப் போற்றிவந்தாராக, அவனே பொய்ம்மையை மேற்கொண்டு ஒழுகினுன். இறைவன் தன் திருவருளால் மாங்கனிபெற்றதை உரைப்பதா இல்லையா என்று சிறிது நேரம் கலங்கிய அவர், நிகழ்ந்ததைக் கணவன் பால் கூறியதற்குச் சிறந்த காரணம் வாய்மைச் சீலத்தை நெகிழவிடலாகாது என்பதே என்று "செய்தபடி சொல்லுவதே கடனென்னுஞ் சீலத்தார்....புகுந்தபடி தனைமொழிந்தார்," என்ற வாக்கால் அறியப்படும். அவர் சொல்லிய சொற்களில் நம்பாமல் "திருவருளேல் இன்னமும் ஒன்று அழைத்தளிப்பாய்" என அவன் கூறினமையால் தான் அடிக்கடி பொய் கூறுமாறுபோல அவரும் கூறுகின்ருரோ என்று ஐயுற்ருன்போல் தோற்றுகிறது. பின்னர் மனைவியார் அவன்பொருட்டு மற்ருெரு கனிவேண்டி நின்றக்கால் மொழிந்த சொற்கள் நோக்கற்பாலன. அவை "ஈங்கு இது அளித்தருளீரேல் என்னுரை பொய்யாம்" என்பன. இதனுல் அறியப்படுவன அவர் பழம் வேண்டியது கணவன் குறையை நிரப்புதற்கு அன்றென்பதும் வாய்மையைக் காக்கவே என்பதுமாம். அவனே, பாண்டி நாட்டில் மறு மனைவியோடு வாழ்ந்து வருங்கால் தான் முன்னர் ஒருத்தியை மணந்துள்ளமை வெளியே புலப்படாவாறு பொதிந்த சிந்தனையுடையனுய் முக மலர்ந்து ஒழுகிவந்தான். இது பொய்மையன்றெனின், அவன் கூறிய சொற்கொண்டே அவனது பொய்மை புலப்படுத்தப் படும். முதன் மனைவியை அணங்கெனக் கருதித் தொடக்க மின்றி இருந்துவந்தவன் அன்னுரைப் பிரிந்தக்கால் சொல்லியது யாது? "நெடுநிதி கொணர்வேன்" என்பதே யன்ருே? அவரை விட்டு ஓடி ஒழிவதே எண்ணமாகக் கொண்டிருந்த அவன், அதற்கு. வேண்டிய முயற்சியில் தலைப்படுங்காலும் கடலிற் சென்று அரும்பொருள் கொண்டு வருவதாகவே சொல்லிச் சென்ருன்! ஒப்பில் மாநிதியமெல்லாம் ஒருவழித் திரட்டிய பிற்பாடு, தான் முன்னர்ச் சொல்லிய சொல்லிற்கு முரணுக வேருேர் நாட்டுப்பதியினன்ருே தங்கிவிட்டான்? இதனுல் அவன் சிந்தையும் சொல்லும் செயலும் வேறுபட்டிருந்தமை எளிதில் தெளிவாகும். இப்பொய்மையாளனும் வாய்மையறம் பேணிய வனிதையாரும் தம்முள் இயைந்திருத்தல் எங்ஙனமாம்?

புனிதவதியார் கணவன் மனநிலையை அறிந்திருந்தவாறு அவன் அவர் நிலையை அறிந்தானல்லன். மாங்கனிகள் இரண்டைப் பரமதத்தன் வீட்டிற்கு அனுப்பியபொழுது கூறிய சொற்கள், "இல்லத்துக் கொடுக்க" என்பன. கொண்டு

வந்தஆள் அச்சொற்களைக்கூறியே அவற்றை மனைவியிடம் சேர்த்திருப்பன். "கொடுக்க" என்று சொன்னானேனும் "வைக்க" என்பதே கணவன் கருத்து என்பதை உணர்ந்திருந்தார் அம் மாதரார். "இல்லாளன் வைக்க எனத்தம் பக்கல்முன்னிருந்த மாங்கனிகள்", என்ற செய்யுட்பகுதியாலும், "கணவன் தான் மனையிடைமுன் வைப்பித்தமாங்கனி" என்ற பகுதியாலும் இதன் உண்மை அறியப்படும். அவ்விரண்டு கனிகளில் ஒன்றையே அடியார்க்குப் படைத்தவர் இன்னொன்றும் வேண்டுமா எனக் கேட்டதாகத் தெரியவில்லை. கனியுண்டலில் விருப்புடையன் கணவன் என்பதை அறிந்திருந்ததால் ஒன்றை அவனுக்கே என வைத்து விட்டனர். அடியார் வந்த நேரத்தில் கறிகளும் ஆகியிருக்குமேயானால், மற்றொரு பழத்தையுங் கணவனுக்கே வைத்திருப்பர். கறியமுது அப்பொழுது உதவாத காரணத்தான் ஒருகனியை அடியார்க்குப்படைத்துவிட்டஅவர், கணவன் மற்றொரு கனியையும் இடுக எனக்கேட்டபொழுது அடியார்க்கு இட்டு விட்டதை அவர் இயம்பாது இருந்ததின் காரணம் அங்ஙனம் இட்டதற்காக அவன் வெகுள்வன் என்பதே போலும்! திருவருளால் கனிபெற்ற செய்தியை விளம்ப அவர் தயங்கியது அவன் திருவருளில் ஐயங்கொள்வான் என்பதனாற் போலும்! இவ்வாறெல்லாம் அவனது மனமறிந்து அவர் ஒழுகி வந்தாராக, அவன் அவர் மனநிலை அறிந்தானல்லன். அறிந்தானேல் "திருவருள்" என்பதில் ஐயங்கொண்டிரான். "திருவருளேல்" என்றவாறு ஐயுற்று அவன் கேட்டமையான், மனைவியது வாய்மையையும் அகவழிபாட்டுச் சிறப்பையும் அறிந்திலன் என்று சொல்லத்தக்கான். பாவையார் அவனை அறிந்திருந்தது போல் அவனும் அவரை அறிந்திருப்பின், அவர் தம் கேண்மை நீண்டு நின்றிருக்கும்.

பரமதத்தனுக்கு ஏற்றமனைவி புனிதவதியாரல்லர்; அவன் மறுமுறை மணந்துகொண்ட பெண்ணேயாவள். இறைவனையே ஏத்தித் தொழுதுகொண்டு கணவனை வணங்கக்கூசும் புனிதவதியார் அவனுக்கியைந்த மனைவி யாவரா? "தலைப் புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும், கடைப் புணைக்கொளினே கடைப்புணைக் கொள்ளும்" என்றவாறே போல் ஒழுகிய பின்னையவள் நன் மனைவி யாவளா? பெண்ணொருத்தி காலில் கணவன் விழுவதைக்கண்டு தானும் தன் மகவொடு தாழ்ந்து விழுந்த பெண் அல்லளோ பின்னைய மனைவி? முன்னர் ஒருத்தியை மணந்திருந்தமையை மறைத்தான் கணவன்

என்று அவள் அவனிடம் சினங் கொள்ளவுமில்லை; அவனை வெறுக்கவும் இல்லை. ஆனல், மணந்துளன் வேறொருத்தியை என்று அறிந்தவுடன் புனிதவதியாருக்குக் கோபம் பொங்கி எழுந்தது. யாழோசையையும், குயிலோசையையும்ஒத்த இன் குரலுடைய நங்கையார் இப்பொழுது சீறிவிழுந்து சொல்லிய சொற்கள் இவை :—"ஈங்கிவன் குறித்த கொள்கை இது, இவனுக்காகத் தாங்கிய....தசைப்பொதி....கழிக" கணவனுரை "இவன்" என்று ஒருமைவாசகத்தால் அப்பெரியார் கூறியதே பேரிகழ்ச்சியாம். மறுமணம் புரிந்துளான் என்பதை அறியுங் காறும் கணவனை மரியாதையோடு மதித்து வந்தார் அப் பாவையார் என்பது "**கணவர் தாம்** வணங்கக்கண்ட காமர் பூங் கொடியனுர்.......ஒதுங்கி நின்றுர்", என்றவிடத்துச் சேக்கிழார் அவனைப் பன்மை வாசகத்தால் உரைத்ததால் அறியத்தக்கது. இவ்வாறெல்லாம் புனிதவதியாரும் பரமதத்தனும் ஒவ்வா மனத்தாராய் இருந்தமையாற் போலும் இயைந்த கேண்மை யராய் இருவரும் இறைவனை அடைய முடியாமல் அம்மையார் மாத்திரம் அன்று அவன் கழற்போது கூடினர் என்க.

உ

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாயபரம்பரைத் திருக்கோவலூராதீனம், திருப்பாதிரிப்புலியூர்,

உயர்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய அடிகளார்

பொன்விழாக் கொண்டருளுங்காலையில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்

மகிழ்ந்து கூறிய

# பாராட்டுப் பாக்கள்

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

பூமேவு திருமார்பிற் புயல்வண்ணப் பெருமானும்
மாமேவு திசைமுகனும் மலைத்திழிவு கருதாராய்

முன்பயின்ற விலங்குருவின் முயன்றுசில மகழ்ந்தெய்த்தும்
பொன்பயின்ற தனதூர்தி யுருக்கொடுவிண் புகூஉத்தளர்ந்தும்

நாணெய்து நிலைக்கிரங்கி நளினவிழிக்கெழிற்பதமும்
சேணெய்து மயன்முடிக்குத் திருக்கரமுங் காட்டியருள்

சீர்த்தவிடைக் கொடிவலத்துஞ் சிறியவிடைக் கொடியிடத்துஞ்
சேர்த்தபிரான் வடபுலிசைத் திகழ்சிவ சண்முக குருவே

இஃது எட்டடித்தாழிசை

வல்லார்க்கு முணர்வரிய வகைய நூற் பொருள்சிறிதுங்
கல்லாரு மெளிதுணரக் கழறுவதுங் கடனுமோ

அருந்தவத்தின் றலைசிறப்பீ ரறிஞரவை நடுவமர்வீர்
திருந்து தமிழ்த் தொண்டாற்றுங் கடைச்சேர்கை சிறப்பாமோ

ஆர்த்தவா ரணமேற்றேர் வரியவாசியுநடத்தும்
மூர்த்தியுமாய்ச் சிவிகையுமூர் வதுமுறையின் பாலதோ

காரியமொன் றுங்கருதாக் காட்சியினுற் றடிகள்தச
காரியத்தை நாணுளுங் கருதுவதும் பொருந்துவதோ

மேனுட்டு மொழியினெடு வடமொழியு மிகவறிந்தும்
நாராட்டித் தமிழினையே நயப்பதுவும் நடுவாமோ

பலகற்றே மெனத்தருக்கிச் சிலகற்ருேர்ப் பழியாமை
அலகற்ற நும்பெருமை யறிந்தமைக்குச் சான்ருமோ

வான் வணக்குஞ் சைவநெறி வளர்தமிழ்த்தொண் டாற்றிமற்ருே
ரான்வணக்கா மனச்சிலைக்கு நாணேற்ற லமைவதோ

தந்தையுமுற் றடிவணங்குந் தவத்துறவுக் கெம்பெருமான்
மைந்தனு மிளஞ்சேயி னடிபணிதல் மரபாமோ

இவை எட்டும் ஈரடித்தாழிசை

அருமறை முடியென வறையுப நிடதமொ
டொருசிவ நெறிதழை வுறுபெறு மொழியினிர்.

கடுமைய துறவற நெறியினிர் கவின்மிகு
வடிதமிழ் மகள்வய முறுமுள மகிழ்வினிர்.

புவிமிசை யறிஞரொ டெமையுமோர் பொருளென
வுவகையொ டினிதருள் பொழிமலர் விழியினிர்.

உறுவிழி மணியுட னுயர்பொடி புனைதரு
புறமென வகமொளிர் தரவரு பொலிவினிர்.

இவை நான்கும் ஈரடியராகம்

நரையேற்றுக் கொடியிறைவன் நாவரசைப் பெருங்கடலின்
கரையேற்றும் பதியிருந்தீ ரெமைக்கரையேற் றும்பொருட்டே

மால்கொண்ட பாதியன்ருள் வணங்கலெலா மெம்மனேர்
மால்கொண்டு முழுவதுநும் மலரடியை வணங்குதற்கே.

சொல்லாலே சிலவாய்ப்பல் பொருள்விரிப்பீர் சொற்கேட்ட
வல்லாராற் கற்ருேர்தஞ் செருக்கொழிக்குங் கருத்தன்றே

கண்டினுமின் மொழிபுகன்று கருணைவிழி நோக்கலெல்லாங்
கண்டவர்தம் முளமுழுதுங் கவர்களவு குறித்தன்றே

இவை நான்கும் ஈரடித்தாழிசை

தன்னேரில் பெருந்தகைநீர் சைவசிகா மணியொருநீர்
பொன்னேரு மரியருநீர் புகலடைவோர்க் கெளியருநீர்.

இவை நான்கும் முச்சீரோரடியம்போதரங்கம்

எந்தைநீர் யாயுநீர் எமருநீர் எவருநீர்
முந்தைநீர் புதுமைநீர் முனிவர்நீர் தனியர்நீர்

(இவை எட்டும் இருசீரோரடியம்போதரங்கம்)

எனவாங்கு (தனிச்சொல்)

நற்சிவசண்முக ஞானசிவார்ய
சயிலாதி மரபிற் கயிலாய பரம்பரை
நாவலோர் சூழ்திருக் கோவலூ ராதிப
கோதறுகுணனெலாங் கூடியாங் கீண்டு
நும்மைத் தந்தளித் தெம்மைவாழ் வித்தது

காசினி மங்கையின் கருதருந் தவமோ
செந்தமிழ்க் கன்னி செய்த புண்ணியமோ
சைவமா நெறிபுரி தவத்தி னீட்டமோ
அங்கலிங் கப்பய னறையும் வீராகம
நல்வினைப் பெருக்கமோ நன்குணர் கிலமால்

நும்பொன் விழாவினை யின்புறக்காணவும்
புகழ்ப் பொருளனைத்துஞ் செவிப்புலன் மாந்தவும்
ஈராயிரம்விழி யியைந்து செவியாகும்
சேடனுமல்லேஞ் செவ்விபெறற் கரிதெனச்
செம்மாப் பெய்தினுஞ் சென்றகாலத்

திருந்தோர்தமக்கு மினிப்பிறக் குநர்க்கும்
வாய்த்தின் றம்மவிம் மாண்பென நினைதொறூஉம்
இரக்கமு முடையே மெந்தை நும் வாழ்நாள்
காவிரியெக்கர்ப் பாவியமணலினும்
வான்சூழுடுக்கணத் தொகையினும் வாரிதிக்

குளிர்புனற் சிதறிய துவலைக் குழுவினும்
மிக்குப் பல்கி விழுப் புகழ் பெருக்குக
இம்மையே நாடி மறுமை தேராத்
திமிரஞ் சீத்துத் தெளிவுடை யவர்தம்
அகமாங் கமல மளிய வாயின்ப

நறவு கொப்பளித்து நகமுக மலர்த்துபு
கோப்பிலாச் சமயக் கூவிளிக் கூகைகள்
காப்புதைத் தடங்க நன்னெறி யாளராம்
புட்குலங் கலிப்பப் புவனம் விழித்தெழ
ஞானக் கதிர்த்திரள் காற்றிவா னனந்தலை

நீடுஞ் சுடரென நிற்கமா வெனவே
அறிந்தன கூறியெம் மவாத்தணிக் கிற்பான்
அன்னை தோன்றிய வகமென வாய்ந்து
மால்வரைக் குலமெலாங் கூடலுகந்து
தாதைகைக் கொண்டது தகைசால் மானென

வேனற் புனக்குற மான்கரம் பற்றியோன்
சேவடி வணங்கு நின் சீர்த்த
(௧அ) பூவடிசூடிப் புகழ்ந்துவாழ்த் துதுமே.

(இவை முப்பத்தெட்டடி நேரிசையாசிரியச் சுரிதகம்)

அம்மானை

(௨) சீரார் புலிசைச் சிவஞான சண்முகனுர்
ஏராரோர் வேளேமுனிக் திருப்பவர்கா ணம்மானை
ஏராரோர் வேளேமுனிக் திருப்பவரே யாமாயின்
நேராயெவ் வேளேயவர் நேசிப்பா ரம்மானை
நேசிப்பார் செவ்வேளே நிச்சலுங்கா ணம்மானை.

நேரிசைவெண்பா.

(௩) கற்றுரை நும்போலக் காண்பரிதே காணுறினும்
வற்றுச் சுவைச்சொனயம் வாய்ப்பரிதாற்—பெற்றுலும்
உள்ளும் புறமு மொருங்கொத் தடைகுநரைக்
கொள்ளுங் குணமரிதா கும்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

(௪) ஆசையுடை யேம்பிறவிப் பயன்பெறலெவ் வாறெனக்கேட்
டதற்கு மாறு
வாசையுடை யவர்பாலே சேர்கென்றுர் விடையைய
மையா வென்றேன்
பேசுமவ ரேறுவது மேற்பதுவு மஃதென்றுர்
பின்னென் செய்கேன்
மூசுமளிப்பொழிற் புலிசைச் சிவஞான சண்முகப்பேர்
முதல்வர் மாதோ

கட்டளைக் கலிப்பா

(௫) சின்மயப்பர மன்புலி சைப்பதித்
தேசிகச்சிவ சண்முக ஞானியார்
பொன்விழாத்தரி சிக்குநற் பேறுடைப்
புலவிர்வானிற் புலவரும் போந்தனர்
நன்மை மற்றித னுங்கிலே யாற்றமிழ்
நங்கைமேன்மை யவர்புகழ்க் கெஞ்சுமோ
தன்மை யாற்றுதி செய்ம்மின வாரவே
தாள்வணங்கிப்பல் லாண்டிசை சாற்றியே

நலம்.

---

இயற்றிய திருவாளர் தோரமங்கலம்,
ஆசிரியர் அ. வரதநஞ்சையபிள்ளேயவர்களாவர்.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.

௨

## திருக்கோவலூர் ஆதீனம்

## திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்தலைவர்

# உயர்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகளாரது

## பொன்விழாவில், தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார்

## கூறிய வாழ்த்து

தென்னாடும் தென்றமிழும் திகழ்சைவ நற்றுறையும் சேர்ந்தோன் றாகி
முன்னீட்டும் தவப்பயனாய் மும்மையவை நலம்பூக்க முளைத்தாய் போற்றி!
எந்நாட்டும் எஞ்ஞான்றும் இங்கிவர்சேர் இருங்குரவர் இலரென் றியாரும்
சொன்னாட்டச் செவ்வேடன் துணையடியின் அருளோங்கும் தூயோய்
[போற்றி!

பத்துறுமா றாண்டளவில் பரமனருள் இருந்தபடி பட்டம் ஏற்றல்,
எத்துணைநல் லாண்டுறினும் ஈரெட்டாண் டெல்லையினில் இருத்தியென்றே,
அத்தனருள் வரமாக அறிந்திட்டாம்; அஃதாமேல், ஐம்ப தென்னும்
இத்துணையாண் டிரும்பணிகள் இயற்றியதில் இறும்பூதொன் றில்லை யம்மா!

எத்தகைய கொள்கையினர் எந்நிலையர் எந்நாட்டார் எனினும் அன்னோர்,
வித்தகஞ்சேர் அடிகளது திருமுன்னர் மேவிடுநல் வினையை எய்தின்
பத்திமிகு முள்ளத்தாற் பணிந்தொடுங்கி வாழ்த்துரைத்துப் பார்த்த கண்கள்
வைத்தநிலை மாறாமே மனநிறைந்த மகிழ்வினராய் மன்னுவாரே!

பல்லாண்டா எமதடிகள் பகர்ந்தருளும் சொன்மழைகள் பயன்மிக் குள்ள
பல்லாயி ரக்கணக்கில் படருவன; அவையிற்றைப் பகரச் சேற்றி
எல்லாமொன் றாயிணைப்பின், இன்னசெயல் எவ்வுலகத் தெவர்தம் மானும்
ஒல்லாமை, உலகமெலாம் உள்ளங்கை நெல்லியென உணரு மன்றே.

பொங்குபுகழ் எமதடிகள் பொன்விழாப் புரியுரிமை பொருந்தி டங்கள்
தங்குதமிழ்ச் சங்கங்கள், சார்ந்தகலை மாடங்கள், சைவ மோங்க
எங்குமுள பேரவைகள், எழிலாதீ னத்திடங்கள் இன்ன வேனும்
இங்குநிகழ் வதனேற்றம் ஈன்றாராம் முதியோரிங் கிருத்தல் போலும்!

பொன்னூரும் திருவிழாப் பொலிவிதனை எமக்கருளும் புனிதன் றானே
எந்நாளும் இந்நாள்போல் எமதடிகள் திருவடிக்கீழ் இணைந்துகூடிக்
கண்ணூரும் பயன்பெற்றுக் கருத்தாரும் மகிழ்வுற்றுக் கனிந்து வாழ்த்தி
மின்னூரும் மணிவிழா மேவுவதுங் கண்டிருக்க வேண்டு வாமே.

ஒலியென்று முளததுதான் உலகெங்கும் உய்ப்பதெனும் உண்மை,கண்முன்
மலிகின்ற இந்நாளில், வானமிழ்தம் எனுமடிகள் வாய்ச்சொ லெல்லாம்
நிலைநின்ற பொருளாக்கி நீணிலத்தே யென்றென்றும் நிலவச் செய்தல்,
கலைநின்ற அடியார்சேர் கழகத்தின் கடமையதாம் கருதுங் காலே.

அடிகளது திருவுருவம் அடியார்கள் இலந்தோறும் அமைதல் வேண்டும்;
அடிகளது பொன்னுரைகள் அச்சிட்டெவ் வெவர்காத்தும் அடைதல்
[வேண்டும்;
அடிகளது மணிமொழிகள் அந்திதொறும்ஒலிப்பரப்பில் அலர்தல் வேண்டும்
அடிகள்திரு வுலாக்காட்சி ஆண்டுதொறும் தமிழ்நாட்டில்அருளல்வேண்டும்.

வாழிதிருக் கோவலூர் மன்றிருப்பா திரிப்புலியூர் மடங்கள் வாழி!
வாழிதிரு ஞானியார் மடாலயமா மரபினொளிர் மாண்போர் வாழி!
வாழியமா ணவர்கழகம்! வளமுறுநற் கல்லூரி வாழி வாழி!
வாழியவிம் மடஞ்சார்ந்து மலியடியார் திருக்கூட்டம் வாழி வாழி!

வாழிகலைக் கடலெழுந்து மறுவிலுரை யமிழ்தருளும் மதியம் வாழி!
வாழியடி யார்மனத்து மயக்கவிருள் போக்கிடுவிண் மணிதான் வாழி!
வாழிதமிழ்ப் பயிர்சைவ வான்பயிர்சட் கருண்மழைபெய் மாசில்கொண்டல்!
வாழிசிவ சண்முகமெய்ஞ் ஞானசிவ குருவடிகள் வாழி வாழி!

பிரமாதி, கார்த்திகை,
௫-ஆம் நாள். }

சங்கத்தார்

--------------------

காந்தைக்கவியரசு, திரு. R. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

# உயர்திரு. ஞானியார் சுவாமிகள் பொன்விழாப் பாராட்டுரைகள்

# I

திரு. பண்டித ந. மு. வேங்கடசாமிநாட்டார் அவர்கள்

## சொல்லின் செல்வர்

உலகில் மக்கள் எய்தும் பேறுகளுள் கல்வி, பொருள் என்ற இரண்டையும் செல்வம் என ஆன்றோர் வழங்குவர். இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாததாயினும் கல்வியை நோக்க இறப்ப இழிந்ததேயாகும். திருத்தக்க தேவர் சிந்தாமணியில்,

'நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள் செய்வார்க்குமஃதிடம்'

எனப்பொருளினை வாளா கூறிக் கல்வியை நற்பொருள் என விசேடித்துக் கூறினர். தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் யாரானும் வௌவப்படாததும் கொடுத்தலாற் குறைவுறாததும் ஆகிய சீரிய செல்வம் கல்வியே என்றும், பொன், மணி முதலியன அன்னவல்ல என்றும் அவற்றின் இயல்பு தெரித் துணர்த்தியுள்ளார். மாணிக்கவாசகப்பெருமான் ஓதற்குப் பிரியும் தலைவன் கூற்றில் வைத்து,

"சீரளவில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரை"

எனக் கல்வியை மேருமலையோடு ஒப்பித்துப் பாராட்டியுள்ளார். இங்ஙனம் கல்வியின் சிறப்பைக் கூறும் சான்றோர் கூற்றுக்கள் எண்ணிறந்தனவாகும்.

இத்தகைய சிறந்த கல்வியைப் பெற்றுளோர் சொல் வன்மையும் உடையராதல்வேண்டும். அஃதின்றேல் அவர் அக்கல்வியால் உலகிற்குப் பெரும் பயன் விளைக்குநர் அல்லர். ஏனோரால் நன்கு மதிக்கற்பாடும் எய்துநரல்லர்.

"இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்."

என்பது வாயுறை வாழ்த்து. திருக்குறள் அமைச்சியலில் சொல்வன்மை என்ற அதிகாரத்தாலன்றி, தூது, அவையறிதல், அவையஞ்சாமை என்னும் அதிகாரங்களாலும் இப்பொருள் வலியுறுத்தப்படுகின்றது. அரசியலில் கேள்வி, அறிவுடைமை என்னும் அதிகாரங்களிலும் இது சுட்டப்படுகின்றது.

சொல்வன்மை என்பது என்னை? கற்கவேண்டும் நூல்கள் பலவற்றையும் கசடறக் கற்றுணர்ந்தோர் தாம் உணர்ந்த அரிய பொருள்களையும் கேட்போர் மனங்கொள்ளுமாறு எளியவாகச் சொல்லுதல்; சிறந்த பயனுள்ளவற்றைச் சுருக்கமும் விளக்கமும் இனிமையும் பொருந்த வழுவிலவாகச் சொல்லுதல்; பருவம், நிலை, கல்வி, ஒழுக்கம், செல்வம் முதலியவற்றால் தமக்கும் கேட்போர்க்கும் உளவாய தகுதி வேறுபாடுகளை அறிந்து அவற்றிற்கேற்பச் சொல்லுதல்; முன்சொல்வனவும் பின் சொல்வனவும் அறிந்து நிரல்படக் கோத்துச் சொல்லுதல்; கூறும் பொருளுக்கேற்ப எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேறுபாடமையவும், மெய்ப்பாடு தோன்றவும் சொல்லுதல்; நிமிர்ந்த நிலையும் மலர்ந்த முகமும் தெளிந்த குரலும் உடையராய்த் தடுமாற்றமின்றிச்சொல்லுதல் என்றின்னோரன்ன பண்புகளின் தொகுதியே சொல்வன்மை எனப்படும். இவ்வாறு சொல்லின் உலகினர் அதனைப் பின்னும் கேட்கவிரும்புவர்; விரும்பி ஏற்றுக்கொள்வர்; ஏற்று அவ்வழி ஒழுகுவர். இவ்வாற்றால் சொல்வன்மை யுடையார்க்கு உலகம் வயமாதல் பெற்றும் ஆகவே சொல்வன்மையானது ஓர் வளவிய செல்வமாமென்பதூஉ தேறப்படும்.

குமரகுருபரவடிகள்,

''சொல்வளம் மல்லல் வெறுக்கையாம்'' என்று கூறிய தூஉங்காண்க. முதன் முதலாக மாருதி கூறிய மாற்றம் சிலவற்றைக்கேட்ட இராமன் தம்பியாகிய இலக்குவன்முன்னர் அனுமனைப் பாராட்டி யுரைத்தானாகக் கம்பர் பாடிய,

"இல்லாத உலகத்தெங்கும் ஈங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்கடலுமே, என்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற்றன்றே! யார்கொல் இச்சொல்லின் [செல்வன்?
வில்லார் தோள் இளையவீர, விரிஞ்சனோ? விடைவல்லானோ?"

என்னும் செய்யுளின் கருத்து ஈண்டு அறிந்து இன்புறற் பாலது.

சொல்வன்மை என்பது நூல் கற்பிக்கும் ஆசிரியர்க்கும், அவையின்கண் சொற்பொழி வியற்றுவார்க்கும், முறை மன்றத்தில் வாதுசெய்வார்க்கும், அமைச்சர், தூதர் முதலாயினோர்க்கும் இன்றியமையாத தாகும். நூல், உரை களுள்ளும் மேல் எடுத்தோதிய பண்புகள் அமைந்தனவே என்றும் நின்று இன்பம் பயப்பனவாம்.

இம் மலர்தலை யுலகிற் பல தேயத்தும் பண்டுதொட்டு நாவன்மையான் மேவிய புகழினர் பற்பலராவர். நம் தண்டமிழ் நாட்டிலே தமிழுரையாகிய அமிழ்த மழையைப் பொழிந்து மன்பதை நன்புலம் குளிர்விக்கும் கொண்டலாக இஞ்ஞான்று ஒருவர் உள்ளனர். ஒருவர் என்ற அளவிலே அவர் திருக் கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் திரு. ஞானியார் மடாலயத்தில் அருட்குரவராக எழுந்தருளியிருக்கும் உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகளாவர் என்ப தனைத் தமிழுலகம் தானே அறியும்.

அடிகளின் அளவுபடாத கல்வியின் பெருமையையோ, ஞான மேம்பாட்டினையோ, அறுமுகப்பெருமானை நனவிலும் கனவிலும் தினைத்துணைப்பொழுதும் மறத்தலில்லாத அன்பின் பெருக்கையோ எடுத்தியம்புதற்கு யான் எத்துணையும் சிறியன். அவர்களுடைய சொற்பொழிவுகள் மேலே குறித்தனவும், குறியாது விடுத்தனவுமாய சொல்வன்மைத் திறங்களெல்லாம் ஒருங்கு பொருந்தியவாதல் தேற்றம். அடிகளின் சொன் மாரிகள் சொற் பொழிவுக்கமைந்த பற்பல அற்புத இலக்

கணங்கள் என்றே கொள்ளற்பாலன. அவையிற்றை ஈண் டெடுத்து விளக்குதல் எளிதன்று. பன்முறையும் கேட்டு அந்நன்முறைகளைத்தெளிதல் வேண்டும். அவர்கள் மாண வர்க்குக் கற்பிக்கும் அருமையும் அத்தகைத்தே.

உலகிலே சொற்பொழிவு செய்வார் பற்பலர். ஆனால் உயர்திரு. ஞானியாரடிகளைப் போல் ஐந்துமணி, ஆறுமணி என்னும் காலவளவு நிலைபெயராதிருந்து கேட்போர்சிந்தையும் பிறிதொன்றிற் செல்லாவாறு சொன் மழை பொழிவாரை 'இன்றினூங்கோ கேளலம்'. தொல்காப்பியம், திருக்குறள், சங்கச் செய்யுள், பன்னிரு திருமுறை, சித்தாந்த சாத்திரம் முதலாயதமிழ்நூற்களிலும், உபநிடதம், சிவாகமம், புராணம் இதிகாசம் முதலிய வடநூற்களிலும் சான்றுகள் காட்டி மேற்கொண்ட பொருளைத் தெளிவுறுத்தும் அடிகளின் வித்த கச்சொற்பொழிவு கற்றறிந்தோர்க்குக் கழிபேரின்பம் பயப்ப தொன்றும். எவ்வெப்பொருளை, எப்பாலவரும்எவ்வெம்மதத் தரும் விரும்பிக்கேட்குமாறு உரைக்க வல்லார் அடிகள் ஒரு வரே என்பதனை அனைவரும் அறிவர். அடிகள் எத்தனை ஆண்டுகளாகக் கடல் மடை திறந்தாற்போன்று எத்தனையா யிரம் சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருப்பர்; எத்தனை நூறா யிரவர் கேட்டுப் பயனெய்தியிருப்பர்; என்பன நினையின் அடிகட்குத் தமிழுலகம் எவ்வளவு கடமைப் பாடுடையது என்பது புலனாகும்.

அடிகள் மடாலயத் தலைமையேற்ற(ஐம்பதாம் ஆட்டைப்) பொன்விழாக்கொண்டாடும் பேற்றுக்குரியமாகியநாம்அவர்கள் மேலும் நல்லுடம்போடு பல்லாண்டு பல்லாண்டு வாழப் பல் லாண்டு கூறுவோமாக.

# II

ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், போளூர்.

உலகெலாம் மலர்ந்த பரமன் திருவருள் நலம் நிலவும் நம் தமிழ் நாட்டில் திருந்திய செல்வமுடையார் பலர் உளர்; சீரிய குணஞ் செயல்களுடையாரும் அவரொப்பவுளர். எனினும் இவர்தம் பெயர்க்கும், குணஞ் செயல்கட்கும் ஒற்றுமை பெரிதும் காண்பதரிது. அவ்வாறு காணப்பெறும் தகுதியுடையார் ஒருவர் உளரெனின், அவருண்மை அந்நாட்டின் அரும் பேறுகளுள் பெரும் பேருகும். அவரைத் தம்மிடையே பெற்று, அவரது சொல்லும் செயலும் கேட்டும் கண்டும் பேரின்பமடையும் மக்களே பெருமக்களாவரெனின், அஃது அனைவரும் விரும்பி யேற்கப்பெறுவ தொன்ருகும். அத்தகைய பெருமக்களாம் பெருமை இன்று நமக்கு எய்தியுளது. இப்பெருமை யெய்தற்குரிய சொல்லும் செயலும், அவற்றிற்கியைந்த பெயரொற்றுமையும் யாவும் ஒப்பவுடைய பெருமகனர், இதுபோது நமக்கு அறிவுச்சுடர் வழங்கிச் சமயவுண்மையும் தமிழ்ப்பெருநூல் நுண்மாண்பும் இனிதுகாட்டி நம்மை உய்வித்து வரும் வள்ளலாகிய தமிழ் மாண்புலமைச் சைவப் பெருந்திரு, சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகளாராவர்; இவர்களை இன்று தமிழுலகம், “சிவமணம் கமழும் செஞ்சொல்லும் சண்முகப் பரமனது தனியருள் காட்டும் தகுசெயலும், பொய்யறிவும் பொய்யொழுக்கமும் போக்கி மெய்யறிவும் மெய்யொழுக்கமும் விளக்கி யாவரும் சிவமாந்தன்மை யெய்துவிக்கும் ஆசாரியநெறிமையும், குறைவறநிறைந்த அடிகள், எங்கள் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகளே” எனப் பொன்விழாக் கொண்டாடிப் புகழ்ந்து மகிழ்கின்றது. எங்கள் ஆசிரியப் பெருந்தகையாகிய இப்பெருமான் திருவடிகள் இம்மாநிலத்துப் பல்லாண்டு மருவி வாழ்க! எங்கும் என்றும் இன்பமே நிலவுக!

நல்லதன் நலனும், தீயதன் தீமையும், உள்ளவாறு காண்டல் அறிவு என்பர். “எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு” என்பர் நம் திருவள்ளுவப் பெருந்தகையார். இவ்

வறிவு மக்களினத்து ஒவ்வொருவரிடத்தும் நிலவுகிறதெனி னும், செயலாற் பலருமறிய விளங்கி நிற்குமிடத்திற்றான், தன்னுண்மையினை எடுத்துக் காட்டுகின்றது. அதனை யுடையாரே அறிவுடையார் என உலகம் போற்றி மகிழ் கின்றது. அவ்வறிவும், பிறர் அறிவுக்கு எளிதிற் புலனாகாச் சமய நுண்பொருளையெடுத்து விளக்குமிடத்து, "ஞானம்" என இந்நாளில் வழங்குகின்றது. இந்த உயரிய ஞான முடையவரையே, "ஞானியார்" என்று பாராட்டி வழங்கற்கு அறிவுடையுலகம் ஒருப்படும். இன்று, "நீவிர் ஞானியார் சுவாமிகளை அறிதிரோ?" என்றும், "ஞானியார் சுவாமிகள் பேசுதல் வேண்டும்; நாம் கேட்க வேண்டும்" என்றும் பலரும் சொல்லாடுவது பெருவழக்காக வுளது. இவ்வழக்கில் வரும் "ஞானியார்" என்னும் சொல் லின் பொருளாக விளங்குபவர் ஒருவர் உளராயின், அவர், மக்களின் மனநிலத்தில் எத்துணை உயரிய இடம் பெற்றுள்ள னர் என்பது, இனிது தோன்றி இன்பம் செய்யும். அந்த, இனிய, அரிய, பெரிய, தூய சொல்லாய 'ஞானியார்' என்னும் சொற்பொருள் ஆகிய பெருமான், நம் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகளேயாவர். "லோககுரு", "மடாதிபதி" எனவரும் சிறப்புப்பெயரையும், "ஞானியார்" என்னும் சிறப்புப் பெயரையும் ஒப்பு நோக்கின், "உண்மை ஞான நிலையம் யாண்டுளது என்பதை நன்கு அறிந்தே, இத்தமிழுலகம் இப்பெருமானைப் பொன்விழா வெடுத்துப் பொலிகின்ற" தென்று அறிவுடையார் அனைவரும் துணிபு காண்பார்.

தமிழ்நாட்டில், அறிஞர் உலகில், மூன்று பெருமொழி கள் வழக்கில் உள்ளன. அவை, தமிழ், ஆங்கிலம், சமஸ் கிருதம் என்பனவாகும். இம்மூன்றினும் ஒத்த புலமை யுடையர் மிகச்சிலரேயாவர். அவருள்ளும் கேட்டார்ப் பிணிக்கும் தகைமையுடைய சொல்வன்மை பெற்றார் மிகச் சிலரே; அச்சிலர் தம் முடிமணியாய்த் திகழும் செம்மை, நம் "ஞானியார் சுவாமிகட்கே உண்டு" என்பது மிகையென மேலோர் நினையார்கள்.

நம் "ஞானியார் சுவாமிகள்" சீரிய சொல்வன்மையுடை யர் என்பது உலகறிந்த செய்தி. "கேளாரும் வேட்பமொழிவ தாம் சொல்" என்னும் திருமறை, இவர்தம் சொல்லையே

பேரிலக்கியமாகக் கொண்டது என்னின், அது புனைந்துரையாகாது. இவர்தம் விரிவுரையின் பெருநலத்தை வியந்த எங்கள் கரந்தைக் கவியரசர், "இமையவர் நாட்டமிழ்தினிலும் இனிதினிக்கும் விரிவுரையின் ஏற்றம் ஓரின், இமையமொடு குமரியிடை இந்நாட்டன்றெந்நாட்டும் இணையொன்றுண்டோ" என்றும், "தெய்வமணப்பாங்கு" பெற்றது என்றும் பாடிப் பரவியுள்ளார் எனின், யாம் வேறு கூறுவ தென்னை? எனினும், இவர்தம் சொல்வன்மையின் சிறப்பியல்புகளுள் இரண்டொன்றினை ஈண்டுக் கூறிப் பாராட்டற்கு எம் உள்ளம் விழைகின்றது.

நல்லிசைப் புலமை நலம் மிக வாய்க்கப்பெற்ற ஒருவர், தம் புலமைக்கண் தோன்றிய நுண்பொருள்களைப் பிறர்க்கு உணர்த்த வேண்டுமென விழைவது இயல்பு. அச்செயற்கு உரிய துணைசெய்யும் சிறப்பு சொல்வன்மைக்கேயுண்டு. சொல்லப்படும் நுண்பொருளைக் கேட்போர் ஏற்கும் வகையறிந்து அவர் பயின்றுள்ள சொல்வழியாக உணர்த்துந்திறம் சொல்வன்மையின் முதற்பண்பாகும். சொல்வோரது அறிவு நிலைக்கும், கேட்போரது அறிவு நிலைக்கும் வேறுபாடு பெரிது உண்டெனினும், சொல்லுங்கால், கேட்போரறிவைத் தம் சொற்பொருளை ஏற்கும் நிலைக்குக் கொணர்ந்து, அதனையூட்டும் வினைத்திறம், மிக அரியதொன்றாகும். ஒருகால் கொணர்ந்தபின், அறிவு வரம் இன்மையின், கேட்போர் மனம் சொல்லப்படும் சொற்பொருள்வழி நில்லாது மெலிந்து நெகிழ்வதுமுண்டன்றோ! அதனையறிந்து, அதற்குப் பிறவாற்றால் வன்மையூட்டி, சொற்பொருளைக் கேட்குமாறு செய்வது சொல்வன்மைக்குரிய வேறொரு பண்பாகும். இன்னோரன்ன பண்புகளால், சொல்வன்மையைப் பெருந்துணைகொண்டு கல்லாமாக்கட்கும் கலைச்சுவை காட்டிச் சமயவுண்மையின் நுண்மை நலங்களை யறிவுறுத்திச் செம்மை செய்யுந்திறம் நம் ஞானியார் அடிகளின் சொற்பொழிவில் இனிது விளங்குகின்றது. "அத்து விதம்", "சிவோகம் பாவனை" "மாயேயமலம்" முதலிய சமய நூல் நுட்பங்கள் பல்லாயிரக்கணக்கினராய மக்கட்கு, அடிகளின் சொற்பொழிவால் நன்கு விளக்கப்பெற்றிருக்கின்றன. சைவசித்தாந்தம், விசிட்டாத்துவைதம், ஆருகதம், கௌமாரம் பௌத்தம், முதலிய சமயஞானமும், இவற்றைக் காய்தல், உவத்தலின்றி ஆராய்ந்து கூறும் ஆராய்ச்சித்

திறமும் கலைப்புலமை மிக்க நுண்ணியார்க்கும் தெளியக்காட்டொணாத அருமை வாய்ந்தவையாயினும், இவை, நம் ஞானியார் சுவாமிகளின் சொற்பொழிவில், இளஞ்சிறாரும் இனிதுணரும் நிலையில், எளியவாய் வெளிப்பட்டு மிளிர்வதுண்டு.

இனி, ஒருவரது சொல்வன்மையும், புலமைச் சிறப்பும் அவர்தம் சொற்பொழிவில் வழங்கும் உவமைகளால் கேட்போர் அறிந்து பரவுதற்குரிய தகுதி பெறுவது இயல்பு. வாழ்க்கை, நூலாராய்ச்சி, தக்காரோடு பயிறல் முதலிய நிகழ்ச்சிகளிற் காணப்பெறும் பொருள்கள், ஒருவர்உள்ளத்தே உணர்வு வடிவாய் நின்று, வேண்டுங்கால் உவம முகத்தாலும், எடுத்துக் காட்டாலும், சொல்வன்மைக்கு ஆக்கஞ்செய்து, கேட்போர் உணர்வை வளம்படுக்கும் என்பது மேனாட்டு உள நூற் புலவரான தாண்டைக் (Thorndike) முதலியோரது முடிப்புரையாகும். அந்நெறியே நோக்கின், நம் அடிகளார் சொற்பொழிவில் மிகவுயர்ந்த கருத்தமைந்த உவமைகள் பல்கித்தோன்றக் காண்கின்றோம். சென்ற யாண்டில் அடிகளார் போளூர் போர்டு உயர்கலாசாலை மாணவர்கட்குச் "சமயக்கல்வி" என்றபொருள்பற்றிய சொற்பொழிவொன்று ஆற்றினர். அச்சொற்பொழிவின் முடிபொருள், "பரம்பொருள் ஒன்று உண்டு; அதனைப்பரவுவது அனைவர்க்கும் கடன்; அப்பொருள் சிவனாயினுமாகுக; திருமாலாயினும் ஆகுக; அல்லாவாயினுமாகுக; யாவராயினுமாகுக; யாவும் ஒன்றே; ஒவ்வொன்றையும் வழிபடுவோர் ஒரு முடிவையே பெறுவர்; அதனால்அவரைக்காய்தலும், பூசலிடுதலும் கூடா" என்பதாகும். இதனை விளக்குதற்குக் கையாண்டவுவமை அந்தக் கலாசாலையும், கல்விப்பயனும், மாணவரும்; அவர்கள் கலாசாலைக்கு வரும் வழிநெறிகளுமேயாயின. முடிவில் சைவரும் வைணவரும், திருநீறும் திருமண்ணும் அணிதல் வேண்டுமென வற்புறுத்தப்புகுந்த அடிகளார், அம்மாணவர்கள், கலாசாலைக்கு வருங்கால் தூயவுடையும் சட்டையும் அணிந்துவரும் செய்தியை அரியவுவமையாகக் காட்டியது, வந்திருந்த அறிவுடைப் பெருமக்கள் அனைவரையும், "உலகமக்கட்குச் சமயஞானமளிக்கும் ஞானியார் என்பது இவர்க்கே தகும் தகும்" எனத் தம் மனம் குளிர, வாய் குளிர நினைந்து பரவிப் பாராட்டச் செய்ததெனின் வேறே என்னெனென்பது !

இனி, அடிகளார் தம் சொற்பொழிவில் ஆங்காங்கே பல இன்றமிழ்ச் செய்யுட்களை எடுத்துக்காட்டி, மக்கள் மனத்தில் அச்செய்யுளின் பொருளை விளக்கி மகிழ்விப்பது இயல்பு. இவ் வியல்பு சொற்பொழிவாளர் பலரிடத்தும் பெருகக் காணக் கிடப்பதேயெனினும், அப்பல்லோரிடத்தும் காணப் பெருத ஒரு சிறப்புநலம் அடிகளார் சொற்பொழிவில் இனிது திகழ் கின்றது. அடிகளார், ஒரு செய்யுளை எடுத்துக்காட்டலுறுவா ராயின், அதனைப் பொருள்நிலைக்கியையப் பதச் சேதம் செய்து இசைத்து, அப்பொருள் நிலையை, கேட்போர் செவிப் புலம், நிறைய வாங்கி, உள்ளத்தே விரையத் தேக்கிக்கொள்ளு மாறு அமையக் கூறுவர். பின்னர், அவர், அதனைப் புரை புரையாகப் பகுத்துச் சொல் ஒவ்வொன்றினும் பொதிந்து நிற்கும் பொருளை அடைவேகாட்டி, வற்புறுத்துந் திறம் நினைத்தொறும், கேட்டோர்க்கு இன்பவுணர்வை எழுப்பு கின்றது. அடிகள், வேலூரிற் கூடிய சைவசித்தாந்த மகா சமாசப் பெருவிழாவில் தலைமை தாங்கி நிகழ்த்திய சொற் பொழிவுகள் ஒன்றில், அப்பமூர்த்திகள் பாடியருளிய திரு விருத்த மொன்றை யெடுத்துக் காட்டியது இன்றும் என் நினைவில் நின்று இன்புறுத்துகின்றது. அத்திருவிருத்தம்,

'ஊனத்தைநீக்கி யுலகறிய யென்னை யாட்கொண்டவன்,
தேனைத்தெனக் கினியான் தில்லைச்சிற்றம் பலவன் எங்கோன்,
வானத்தவருய்ய வன்னஞ்சை யுண்டகண்டத் திலங்கும்,
ஏனத்தெயிறுகண்டாற் பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே'

யென்பது. இதன்கண், பரமன் நாவேந்தரை ஆட் கொண்ட திறத்தை அவையினர்க்கு வற்புறுத்தத் திருவுளங் கொண்ட அடிகளார், "என்னையாட் கொண்டவன்" என்ற தொடரை வாங்கி, பல சீரிய வினக்களால் அவையினர் உள்ளத்தில் அவாவையெழுப்பி, "என்னையாட்கொண்டான்" என்றால் அதனை யார் அறிவார்? யாவரும் அறிய என்னை ஆட்கொண்டான்; யாவர் என்றால் இன்னார் என்ன வேண் டாமா? உலகு அறிய என்னை ஆட்கொண்டான்; "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்று கூறுவரல்லவா? உயர்ந்தோர் அறிய என்னை ஆட்கொண்டான். அப்படி யாயின், உன்னை எவ்வாறு ஆட்கொண்டான்? நீக்கி உல கறிய ஆட்கொண்டான். நீக்கி என்றால் எதனை நீக்கினான்? ஊனத்தை நீக்கி உலகறிய என்னை ஆட்கொண்டான்" என்று ஒவ்வொரு சொல்லையும் அதன்பொருள்நிலை நிரம்பச்

சொல்லியருளினர். இவ்வாறு அவாய்நிலைமுறையால் செய்யுட்குப் பொருளுரைக்குந்திறம் நம் அடிகளார் சொல்வன்மையின் பலநலங்களில் ஒன்ருகும். இம்முறையைப் பின்பற்றிச் சொல்லப் புகுவோர் சிலர் இப்போது உளர்; ஆயினும், அவர்பால் அது வித்தகம் பெருது கேட்போருள்ளத்தை மகிழ்விக்கும் வன்மை யிழந்து நிற்றலால், இத்திறம் அடிகட்கே இயல்பாய் அமைந்த பெருநலம் என்பதனை யாம் போற்றிப் பரவுகின்ருேம்.

இனி, அடிகளார் சொற்பொழிவு செய்யும்போது அதனைக்கேட்கும் மக்களது உள்ளப்பான்மையை அறிந்து காலத்தை நீட்டுதலும் சுருக்குதலும் செய்துகொள்வர். சீரிய கூரிய அறிவினர்பாலும் பெருகக் காணப்பெருத இவ்விரகு, இவர்கள்பால் மிக எளிதாய் உளது. மூன்று மணி நேரம் நான்கு மணி நேரம் என மணிக்கணக்கான காலம் சொற்பொழிவு நிகழ்த்துவது என்பது அடிகட்கு மிக எளிமையாக வுளது. அத்துணை நெடுநேரத்தை மக்கள் ஒரு சிறு வருத்தமுமின்றி இருந்து கேட்குமாறு அவர் மன நிலையறிந்து நகைச்சுவையும், உவகைச்சுவையும் என்ற சுவை பலவும் தோன்றச் சொற்பொழிவாற்றும் வன்மை இவரது நா நலத்தின் ஆக்கமாக வுளது. நகைச்சுவை தோன்ற வுரைக்குமிடத்து அவையினர் நகைப்பொலி யெழுந்து அவையகம் முழுதும் குழுமுங்கால், இவரது அரியதிருவாயின் இதழ்கள் சிறிதே விரிந்து, உண்ணிற்கும் பற்களைச் சிறிதும் காட்டாது முகிழ்த்த மலரிதழ்போல் முறுவலிப்பதொன்றையே செய்ய, முகத்தின் ஞானவொளி அறிவுடையார் உள்ளத்தில் வியப்பும் நன்மதிப்பும் பயக்கின்றது. மக்களின் ஒழுக்கக் குறைவுகளை எடுத்தியம்பித் திருத்த முயலுமிடத்துச் சில இனியவுரைகள் பகர்வர். அக்குறையுடையாரும் அவற்றை இனிதேற்கும் முறையில் சொற்கள் “தென்னுண் தேனின் தேக்கிய” வாய் அமைந்து நிற்கின்றன.

இனி, அடிகளோடு தனித்து உரையாடுமிடத்து இனிய நயமொழிகள் போந்து உள்ளுதோறுள்ளுதோறும் உள்ளம் உருக்கி நிற்கும். யான் அடிகளோடு ஒருகால் உரையாடுங்கால் துறவியொருவரைப் பற்றிய பேச்சு நிகழ்ந்தது. அப்போது, அடிகளார், முகம் மலர்ந்து, இன்பமொழுக, “அவர்கள்... ...............ஆதீன சம்பிரதாயங்களை நன்கறிவார்கள். மகா சந்நிதானங்களை எப்படிக் காண்பது; காணச்செல்வோர் எவ்

வாறு உடைதரிப்பது; எவ்வாறு கை கட்டுவது; எவ்வகையில் வாய் பொத்துவது; எவ்வாறு உண்பது; எப்படி கை கால்களைத் தூய்மை செய்வது என இவற்றைச் செவ்வையாக அறிவார்கள். எவ்வெந் நூல்களை யாராய்வது என்பதை நோக்குதற்குமட்டில் போதிய அவகாசம் அவர்கட்குக் கிடைத்திலது'' என்றார்கள். பின்னர் யான் அவர்கூறிய அனைத்தும் எண்மையாதல் கண்டதும் மெய்குளிர்ந்தது ஒரு புறம் இருக்க, அவர் மொழிந்தவற்றிற் பிறந்த நகைச்சுவையின் மாண்பு பெரிதும் இன்புறுத்துகின்றது. மற்றொரு ஞான்று, இந்நாளில் நிலவும் தமிழ்க்கல்வி நிலையைப்பற்றிய பேச்சு எழுந்தபோது, இக்காலத்துக் கலாசாலையிலுள்ள ''சரித்திரம், பூகோளம், அறிவுநூல்'' முதலியவற்றைப் பற்றிக்கூறும்போது, மேனாட்டறிஞர்களான மெக்காலே, அக்சிலி முதலியவர்கள் எழுதிய ''சரித்திரம்'' ''அறிவுக் கலை'' முதலிய உரைநூல்கள், சிறந்த உரையிலக்கியங்களாகத் திகழ்தல்போல, தமிழில் எவையும் இல்லை; மாணவர்கள் வகுப்பு உயரவுயர, அவர் படிக்கும் இந்நூல்களின் நடையும் பொருளும் உயரவில்லை யென்ற சொற்கள் பிறந்தன. அது போது, அடிகளார் ஓர் அரிய பொருளுரை விளம்பினார்கள். ''இக்காலக் கல்வியாளர்கட்கோ, ஆசிரியர்கட்கோ அத் தகைய அறிவு வேட்கை யிருப்பதாகவே தோன்றவில்லை'' என்று கூறினார்கள். அவர்கள் கூற்றின் உண்மையை, இது போது வெளியாகும் தமிழ் உரைநூல்களின் இழிந்த தமிழ் நடையும் பொருளுயர்வின்மையும் இனிது காட்டுகின்றன. இவற்றை நோக்கின் அடிகள் சமயவொழுக்கத்துக்குரிய உண்மையாராய்ச்சியோடு சிறார்களின் கல்விவளர்ச்சியிலும் மிக்கநாட்டமுடையவர் என்பது நன்கு விளங்கும். இன்ன நலமுடைய அடிகள் தம் கருத்தை இயன்ற அளவில் செயல் முறையிலும் காட்டுவார்போல, தமிழ்க்கல்லூரியொன்று நிறுவியும், தனித்தமிழ் மாணவர்கட்குத் தமிழ்க்கல்வி வழங்கியும் தமிழ்ப்பெருந்தொண்டாற்றி வருகின்றனர். இதனை நினைக்கும்போது நம் கரந்தைக் கவியரசர் அடிகளைப் பாராட்டிக்கூறிய இனியபாட்டொன்று நினைவிற்கு வருகிறது.

> ''கல்லூரி நாட்டுவித்தாய்; கணக்காயன் தானேயாய்க்
> கற்பித்திட்டாய்;
>
> சொல்லாடுந் திறமையினில் துணையில்லாக் கழகமது
> தோன்றச் செய்தாய்;

பல்லூரும் சைவநெறிப் பாங்குயர விரிவுரைகள்
பகருமாறு
செல்வார் தம் செலவினுக்காம் செல்லலறப் பொருளளிக்கும்
சிந்தை கொண்டாய்!"

இவ்வினிய பாட்டின் நான்காவதடி யுணர்த்தும் பொருள் யாரும் குறிக்கொள்ளற்குரிய பொன் மொழியாகும். இதன் கண், அடிகள் தம் ஆதரவில் நடத்தும் சொற்பொழிவு விழாக்களில் வந்து, தம் சொற்பொழிவால் தொண்டாற்றும் அறிஞர்கட்கு நிரம்பப் பொருளளித்துச் சிறப்பிக்கும் வள்ளன்மை குறிக்கப் பெறுகின்றது. சொற்பொழிவு செய்பவர் மிகக் குறைந்த தகுதியினராயினும், அவர்க்கு அடிகள் இருபது வெண்பொற்காசுகட்குக் குறையாத தொகையருளுகின்றார்கள்; அருளுங்கால், அவர்கள் "இத்தொகை உங்கள் புலமையை மதிப்பிட்டுத் தருவதன்று; உங்களுடைய வரவுசெலவுகட்கு வேண்டும் படிச்செலவே; எம்பெருமான் திரு முருகக் கடவுள் திருவருளே உங்கட்கு எல்லாம் அருளவல்லது" என்பர். இவ்வாறு தாம் போற்றி மகிழும் தமிழ்நலம் பிறர்பால் இருப்பக்கண்டு மகிழ்தலும், மகிழ்ச்சிக்குறியாக வேண்டு வனவருளும் வள்ளன்மையும் நம் அடிகள்பால் காணப்பெறும் சிறப்பியல்களாகும். ஒருஞான்று, செந்தமிழ்ப் புரவலரைப் பற்றிக் கூறுங்கால், "யாம் ஆண்டவனைப் பரவுமிடத்து, ஒரு சிலரை எம் உள்ளத்து உள்ளுவதுண்டு. அச்சிலருள், செந்தமிழ்ப் புரவலரின் சீரிய பெயர் தலை சிறந்து நிற்கும்" என்றார்கள். எனவே, அடிகளது உள்ளம் எத்துணைத் தூய்மை யுடையதென்பதும், தக்காரை யறிந்துள்ளும் தகைமை எத்துணை வீறுடன் இவர்தம் உள்ளத்து இலங்கு கின்ற தென்பதும் யாவரும் இனிது காணத்தெளிவாகும்.

இன்னோரன்ன பண்பு மேம்பட்டுப் பொலியும் எங்கள் அருட்குரவர், தீவிய செந்தமிழ்ச் செல்வர், திருநெறியாய சைவம் வளர்க்கும் திருவருட் செம்மலாகியதிருமிக்க அடிகள், சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய அடிகள் செழுமை மிகும் உடல் நலமும் விழுமிய பொருணலமும் சிறந்து, செந்தமிழும் திருநெறிச் சைவமும் தவமுயன்று பெற்ற தனிப் பெருந் தோன்றலாய் என்றும் நின்று நிலவுகவென எண்ணியாங்கருளும் கண்ணுதற் பண்ணவனது வண்ணத் திருவடிகளை மனமுற வணங்கிப் பரவுகின்றேம்.

# III

திரு. க. வெள்ளைவாரணன் அவர்கள்

## அறிவன்; குரவன்; அருந்தமிழாசான்

அறிவிக்க அறியும் தன்மைவாய்ந்த உலக உயிர்கட்கு அறிவிப்போர் உறுதுணை கொண்டன்றி வாழ்க்கைப் பயன் பெறல் இயலாததொன்றாம். மெய்யறிவுப் பொருளாய (ஞானத் திரளாய) பெருமான் சிறப்புடை மரபினமர்ந்து உய்த்திடும் உயிர்நிலையே அறிவர் நிலையாகும். இந்நிலைதான் மக்களாக்கப் பொருளன்றி மாக்களாக்கப் பொருளன்றாம். உயிராகிய தன் நிலையையும் தம்மைச் சார்ந்தார் நிலையையும் உணர்ந்து உலகியற் பொருளியல்பறிந்து ஒழுகலும், உற்றார்க் குறுபொருளுணர்த்தித் தாம்பெற்ற இன்பம்பெற வழிகாட்டலும் வல்லவரே அறிவரெனப்பெறுவர். இவர்தாம், அறிவில் பொருள் எனப்பெறும் உலகம், உணர்த்த உணரும் உயிர், இவையனைத்தும் முற்றவுணரும் முழுமுதற்பொருள் ஆகிய முப்பொருளியல் புணர்ந்துதப்பறவொழுகும்செப்பமுடையராகலின் தாம்முன்னறியா வுண்மையினைப் பின்ன றியுந்தோறும் உளமகிழும் பெற்றியினருமாவர். தம்முள்ளம் சென்றவிடந்தோறும் செல்லவிடாது தீயவழியினின்றும் அதனை விலக்கி நல்லவழியிற் செலுத்தும் அறிவெனும் பெருஞ்செல்வம் கைவரப் பெற்றாராகலின் இவ்வுலகத்து எல்லா நலன்களும் ஒருங்குடையராவர். குதிரையினை நிலமறிந்து செலுத்தும் வாதுவன் போல உள்ளத்தைப் புலமறிந்து செலுத்தும் பேராண்மையாளராதலின் தன்னலந்துறந்த திண்ணியரெனப் பெறுபவர் இவரே. குறித்ததொன்றாகமாட்டாக் குறைவும், நெறிப்பட நிறைந்த ஞானமின்மையும், வெறுப்பொடு விருப்பும் பெற்ற வுயிர்கள் அவற்றால் முறையே பரதந்திரமும், ஏகதேசப் படுதலும், பாசத்தாற் கட்டுப்படுதலும் ஆகிய குற்றங்களைப் பெற்றனவாதலின் அவைதம்முள் ஒன்று தன்னியற்கையினாலேயே ஏனைய வுயிர்கட் கறிவுறுத்துதலென்பது குருடன் குருடர்க் குணர்த்தல் போலாம். ஆதலால் மெய்யறிவுடைய முழுமுதற்பொருளின் திருவருளாற்றல் பதியப் பெற்றவரே அறிவர் நிலைக் குரிமையுடையா ராவர். வெகுளியில்லா அமைதி மருவிய தோற்றமும், அதுபற்றித்தம்மை அடைந்

தோர்க் குறுதிபயக்கும் இன்சொல்லும், அதுகேட்டுத் தம்மை நண்ணினோர்க்கு நன்ருற்றலும் உடையோராந் தன்மையே அறிவர்க்குரிய சிறப்பியல்பாம். இச்சிறப்பியல் புடையோர் தம்மை நண்ணுதார்க்கும் நலம் பயக்கும் உள்ள முயற்சியுடையோ ராவர். இத்தகைய பண்புடைய பெரியோரைப் பெற்றுவருத லொன்றினாலேயே உலகம் நிலை பெற்று நிகழ்ந்து வருகின்றதென்றும், அவரிலரேல் அது கெட்டு மாய்ந்தொழியு மென்றும் கருதிய திருவள்ளுவர் அதனை,

"பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்ற குறளால் நன்குணர்த்தினர்.

மேலெடுத்துக் காட்டிய இயல்புடைய அறிவர்க் கிலக்கிய மாகத் திகழ்கின்ற ரொருவரை இத்தமிழ்நாடு, தன்கண் வாழ்வார் செய்த தவப்பயனாற் பெற்று மிளிர்கின்றது. அன்பும் அருளும் ஆருயிரோம்பும் பண்பும் உடைய அப் பெரியார் "வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற்காவிரி" பரந்து வளஞ்செய்யும் சோழவளநாட்டில் திருத் தொண்டர் புராண மியற்றி யருளிய சேக்கிழார் பெருமானைத் தன் பெருமையா லீர்த்துக்கொண்ட திருநாகேச்சரம் என்ற பதியிற் பிறந்தவர் என்று கூறும்பொழுது தமிழ் நாட்டினர், அதிலும் சோழநாட்டினர் அளவிலா மகிழ்வடைவர் என் பதிற் சிறிதும் ஐயமில்லை. திருநாகேச்சரம் நெசவுத்தொழி லிற்குச் சிறந்தவிடம். அங்குபயிலுந் தொழில் நெசவெனவே அதனை யியற்றுவோர் ஏழைகளென்பது தானே போதரும். இவ்வூரில் பெரும்பாலோர் செங்குந்தர்கள். வீரசைவ சமயத்தை மேற்கொண்டவராய பக்தர் எனப்பெறுவார்தம் தூய்மை மருவிய குடியிலேதான் இவண் சொல்லத்தொடங்கிய அறிஞரும் இற்றைக்கு 65 ஆண்டுகட்குமுன் தோன்றினரென் ருல் அதன்கண் வியப்புடைத்தெனச் சொல்வதற்கேற்ற காரணமில்லாமலுமில்லை. இவ்வறிவர் வாழ்க்கையினை நன் கறிந்தவர்கள். அக்காலச் செவ்விநிலையும், அந்நிலையில் அறிஞர் அடைந்த உயர்நிலையும் நோக்குழி வியந்து மகிழ்வரென்பது திண்ணம்.

தோன்றும்பொழுதே புகழ்பெறுதற்கேற்ற நற்பொறி யோடு தோன்றிய இவர்தம் இளமைப் பருவத்துத் தமிழ்

நூல்களை வல்லார்வாய்க் கேட்டுப் பயின்றனர். இக்கால முறையிற் பயிலும் பள்ளியாய நடுத்தரப்பள்ளியில் ஆங்கிலக் கல்வியிற்பயின்று பள்ளியிறுதித் தேர்விற்கேற்ற தகுதிபெற் றிருந்தார்கள். இந்நிலையில் திருக்கோவலூராதீனத்துத் திருப் பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத் தலைமை யேற்று நடாத்திய அடிகளார் இறைவனடிக் கண்மையிற் செல்லவிருந் தார்கள். அச்செவ்வியிலேதான் இங்கு நம்மாற் குறிக்கப்பெற்ற பெரியாரும் அவணழைக்கப் பெற்றுப் பட்டம் கொடுக்கப் பெற்றார்கள்.

"பொன்னுந் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேயவாயினும் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பாலராப............................"

என்ற மெய்யுரைப்படி பேரறிவினராகிய இவ்வறிவரை ஞானியார் மடாலயத் தலைவராக அழைத்தது இறைவன் திரு வருளுக்கு மிகப் பொருத்தமான தொன்றாம். இயற்கையி லேயே பேரறிவுச்செல்வம் பெற்ற இவர்கள் ஞானநிலையமாகிய ஞானியார் மடாலயத் தலைமை பெற்றபொழுது ஞானியாரடி களார் என்ற பெயர்க்குப் பெரிதும் சிறப்புரிமை பெற்றுத் திகழ்கின்றார்கள். இவ்வடிகளாரின் திருப்பெயர் முழுவதும் கூறவேண்டுமானால் அத்திருப்பெயர் அவர்களது பண்பு மேம் பாட்டினைத் தெள்ளிதி னுணர்த்தும் கருவியாத லொருதலை. அத்திருப்பெயர் திருமிகு 'சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாச் சாரிய அடிகளார்' என்பதாம்.

## தமிழர்சமய ஆசிரியர்கள்

தமிழ் நாட்டிற் பல சமயங்கள் பரவி வழங்கின என் பதும் அவ்வச்சமய வளர்ச்சி கருதி அதனுண்மைகளை மக் களுக்குணர்த்த வேண்டி, துறவுநிலை மேற்கொண்ட ஆசிரி யன்மார் பலர் திருமடமமைத்துத் தொண்டாற்றி வந்தன ரென்பதும் அத்தகைய பெரியார்கள் செய்யும் சமயத்தொண் டிற்கு அரசர்களும் வள்ளல்களும் பொதுமக்களும் அன்பு கொண்டு பொருளும் நிலமும் கைத்தொண்டு முதவிப் போற் றினரென்பதும் தமிழ் நாட்டுச் சமயத் தலைமை இடங்களாய

திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய ஆதீனச் சைவமடங்களின் வரலாற்றல் நன்கு பெறப்படும். இத்தகைய சமய நிலையங்கள் மக்களின் நல்லொழுக்கத்தொடு மருவிய சமயத் தொண்டிற்குப் பெரிதும் பயன்பட்டுவந்தனவென்பதும் தமிழ்க் குடியினராய அறிவுடைத் துறவிகளால் இனிது நடாத்தப் பெற்றுக் கலைவளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் கண்ணெனக் கருதப்பெற்று வந்தன என்பதும் இவற்றின் சார்பில் வாழ்ந்த துறவிகள் தமிழ்வளர்ச்சியிலீடுபட்டுப் புலமைபெற்றுமிளிர்ந்ததுடன் ஆண்டவன் பேரருட்கும் பொதுமக்களின் பேரன்பிற்கும் கொள்கலமாயினரென்பதும் இற்றைக்குச் சிலபல ஆண்டுகட்கு முன்னர் வரையிலும் நடந்தேறிய ஆதீன நிகழ்ச்சிகளால் நன்கறியலாம். இந்நிலையங்கள் அக்காலத்து மொழி வளர்ச்சியொடுகூடிய சமய வளர்ச்சியி லீடுபட்டு உழைத்த காலத்துப் போலிச் சாதி வேறுபாடுகளையெல்லாம் நீக்கி எல்லா மக்களையும் ஒருங்குபோற்றிய பெற்றியும் நுனித்துணர்வார்க்குப் புலனுகாமற் போகாது. இவ்வாறு தமிழ்நாட்டு அறிஞர்களால் நடத்தப்படும் அறிவு நிலையத்தின் தொண்டு நாளடைவில் நடத்துவாராய மடத்தலைவர்களின் குறைவால் பெற்ற புகழை இழக்கத் தொடங்கியது. இக்காலத்தேதான் பொது மக்கள் தம் சமய ஆசிரியன்மார்களைப் பேணலொழிந்து தம் சமயத்தொடு மாறுபட்ட கொள்கையுடையாரையும் தம் ஆசிரியராக விரும்பியாங்குக் கொண்டொழுகுவாராயினர். சங்கராச்சாரியார் அவர் சமயத்தொடர்பில்லாத தமிழ்நாட்டு மக்களுக்கு சகுருவாயினர்; ஆதீனங்கள் இன்பக்களரிகளாயின; சைவ சமயத்துக்குப் புறம்பானவர்கள் அதன்கண் எச்செயல்களிலும் இடம் பெறுவாராயினர்; திருமுறைகள் பண்டாரப் பாடல்களென இழித்துரைக்கப்பட்டன. பொதுவாக அறிவு நிலையங்களே அறியாமை நிலையமாயின வென்னலாம். இவ்வாறு இக்காலத்துஇந்நாட்டுச் சமய நிலைகளிருக்கும் நிலையை நோக்கினுல் அவையனைத்தும் இந்நாட்டில் பெயர்கூட அற்றுப்போயிருத்தல்வேண்டும். ஏதோ அவற்றின் முதற்றலைவர்களின் பெருமையே இந்நாளிலும் அவற்றின் பெயர் வழக்கத்திற்குரிய காரணமாதல் வேண்டும்.

இவ்வாறு சமய ஆசிரிய நிலையங்கள் தம்பெருமைகுன்றிக் கல்வியும் ஒழுக்கமும் கைவரப்பெருதாரால் நடத்தப்பட்டிழி நிலையடையுங் காலத்திற்றுன் சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாச்சாரிய அடிகளாராய இவர்கள் ஞானியார் மடாலயத் தலைமை

தாங்கினார்கள். தம் திருப்பெயருக்கேற்ப தமிழர் தனிப்பெருங் கடவுளாய முருகப்பெருமான் வழிபாட்டினைச்சிறப்புரிமையின் மேற்கொண்டு அச்செவ்வேளின் திருவருட்பெருக்கும் வீர சைவக் கருத்தும் சைவசித்தாந்தப்பேருண்மையும் அவற்றோடு தொடர்புடைய தமிழ்மொழியின் தனிச்சிறப்பும் ஆகியவற்றை அவன் திருவருட்டுணைகொண்டறிந்து இன்புற்று "யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனும் பெருங் கருணை யுந்தச் சமயவளர்ச்சி கருதித் தமிழ் நாட்டில் எழுந்தருளினார்கள். கல்வியும் ஒழுக்கமுங் கைவிட்டுச் சாதியொன்றையே பேறாப் பெறு பொருளாகக்கொண்ட சில கயவர் அக்காலத்து அடிகளார் அன்பர்களிக்கச் சிவிகையூர்ந்து வருவதற்கும் பொருது புறங்கூறித் திரிவாராயினர். தம் ஆதீனத்தின் பழையமுறைகளில் தவறக்கூடாதெனுஞ் சான்றோர் கட்டளையினை நீக்கலாகாதெனும் கொள்கை யொன்றே கருதிச் சிவிகையூர்ந்து வருமடிகளார் தென்றமிழ்க்கடலும் வடமொழிப் பௌவமும் நிலைகண்டுணர்ந்த பெருங்குரவராய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்வன்மை யுடையாராகலின் தம் இன்புரையாலும் உயர்நடையாலும் சாதிநஞ்சேறித் திரியும் நண்ணாரையும் தம் வயப்படுத்தித் தமிழ்ச் சைவத் தொண்டினை இடையறாது நடாத்தி வருகின்றார்கள். சமயப் பெருங் குரவர்க்கின்றியமையாது வேண்டப்படும் பொறுமை, எண்ணியுரைக்குமினியவுரை, சிறுமை கருதாத உள்ளப் பாங்கு, பகைவரையும் தன்பாலீர்க்குந் தகவு, பிறருளம் வருத்தாப் பேரறிவு ஆகிய சால்புடையார் அடிகளாராதலின், அவர்தம் தமிழ்ச் சமயத் தொண்டிற்கு அதனொடு தொடர்பில்லாத அயலாரும் முன்வந்து ஆதரவளிப்பாராயினர். இவ்வாறு அடிகளார் சென்ற விடமெங்கும் முருகன் திருவருளும் உடன் போந்து ஆவன செய்துதவலால் தமிழ் வளர்ச்சியும் சைவ வளர்ச்சியும் பற்றிய நன்னோக்கங்களும் அவற்றின் பேருண்மையும் பசுமரத்தாணி போல் நாட்டு மக்களுள்ளத்திற் பதிவனவாயின.

## அடிகளாரின் சிறப்பியல்பு

துறந்தார்தம் தூநெறிக்கண் நின்றாராய அடிகளார் தம் சிறப்பியல்பாக இங்குக் குறிக்கத்தக்க சிறப்புடையன பலவாம். தமிழ் நூல்களில் தடையின்றிச் சென்ற புலமையும் சமய நூற் புலமைக்கேற்றாங்கு வடகலை யுணர்வும் வாய்க்கப் பெற்றுக் கற்றாரும் கல்லாரும் ஒருங்கறிந்து மகிழ்தற்காம் சொல்

வன்மை யெடுத்துரைக்கும் புகழ் வாய்ந்ததாம். கற்றூர்க்கே பயன்படும் பேச்சும்அன்றிக் கல்லார்க்கே மகிழ்வுதரும் பேச்சு முடையார் தமிழ்நாட்டிற் பலராக, அடிகளாரோ எத்திறத் தாருங் கேட்டுணர்ந்து மகிழ்தற்கேற்ற அருமையில் எளிமை சால் சொல்வன்மை யுடையாரென்பதும், ஐந்தாறு மணிக்குக் குறையாது கடன்மடை திறந்தாற்போல் கேட்டோர் நிலை பெயராதிருந்து மகிழச் சொற்பொழிவாற்றும் தமிழ்க் கொண்டல், என்பதும் குறிப்பிடத் தக்கதொன்றும். அடிகள் ஆண்டு பலவாகப் பேசவேண்டினும் புத்தம் புதியவாகச் சொல்லும் பொருள்நிறை யுளத்தினரென்பதும், அவர்கள் சொற்பொழிவினை எவ்வளவு நேரமாயினும் பசி முதலிய உடற்றொல்லைகளுட்படாது மக்கள் கேட்டுமகிழ்வர், என்பதும் தமிழ்நாடறிந்த பேருண்மையாகும். அடிகள் பிறர் பெருமை பேசும் பெற்றியரே யன்றிப் பிறர் குற்றங்கூறுதலை எக் காலத்தும் கொண்டவரல்லரென்பதனை அவரோடு நெருங்கிப் பழகிய அன்ப ருணர்வார்கள். ஆண்டவனருட்டிறத்தை மக்கட் குணர்த்துத லொன்றினையே தம் குறிக்கோளாகக் கொண்டஅடிகளார் பேச்சளவிலொருநிலையும், தம்மளவில்ஒரு தொழிலுமுடைய பிறர் போலாது தாம் சொல்லியாங்கு அத் திருவருட் டிறத்து உறுதிவைத் தஞ்சா தொழுகும் கடப்பா டுடையா ரென்பதனை அடிகளார் வாழ்க்கையினிடையிடையே நேர்ந்த இடுக்கண்களில் அவர்கள் கொண்ட உளப்பான்மை யினை யறிந்தார் நன்குதெளிவர். உளத்தை ஒருநிலையுய்க்கும் விரதத்தினை அடிகளார் எந்நிலையினும் நெகிழ விடுவாரல்லர் என்பதும் உண்ணு நோன்பினும் இறைவழிபாடும் அவன் திரு வருட் சொற்பொழிவும் ஆற்றுங் கடமையிற் சோரா வன்மை நிலையுடையார் என்பதுவும் அவர்தம் நாட்கடன்களை நுனித் துணர்ந்தார் அறிந்துமகிழ்வர். பகைவரையும் வெருது அன்பு செய்தொழுகும் அடிகளாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் நுண்மா ணுழை புலமுடைய வரலாற்றறிஞராற் பொன்னெழுத்தாற் பொறிக்குந் தகையன.

இவ்வாறு சொலற்கரும் பெருமையும் தொண்டும் முருக னருட்பெற்றியும் வாய்ந்த ஞானியாரடிகளாராய அறிவர் பட்டம்பெற்று இற்றைக்கு ஐம்பதாண்டுகளாகின்றன. அடி களார் பட்டம்பெற்ற நிகழ்ச்சியின் பொன் விழாக் கொண் டாடும் இந்நாளில் அவர்களின் உலையா முயற்சியும் தன்னல மற்ற தொண்டும் திருவருள் நம்பிக்கையும்ஆகிய நற்பண்புகள்

மக்கள் வாழ்க்கையிற் பயன்படும் நன்மணிகள் என்பதை மகிழ்வுடன் சொல்லிக் கொள்வதிற்றமிழர்கள் பெருமையடைகின்றூர்கள்.

முருகன் திருவருள்வலன் வாய்க்கப்பெற்ற அடிகளார் முன்னியது முடிக்கும் மொய்ம்புடைய அவனருளால் உடல் நலன் உள நலன்கள் ஒருங்கெய்தித் தமிழ்மொழிக்கும் தமிழர் சமயத்திற்கும் நற்றொண்டாற்றித் தமிழ்மக்களுக்கெய்ப்பில் ஞானவைப்பென என்ஞான்றும் மன்னி வாழ்ந்து எம்மனோர் தம்யாண்டின் வைர விழாவுங்கண்டு மகிழ வாழ்வார்களாக என அவர் திருவடிமலர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

சிவ சண்முக மெய்ஞ்ஞான அடிகளார் திருவடி வாழ்க.

நலம்! நலம்!! நலம்!!!

---

## திருப்பாதிரிப்புலியூர் உயர்திரு ஞானியார் அடிகளார்

# 'பொன்விழா நிகழ்ச்சி'

### 18-11-1939 சனி

காலை 6 மணி

உயர்திரு அடிகளார் அவர்கள் தங்கள் பூசையினைச் சிறப்பொடு செய்து, திருமடத்தில் கூடியிருந்த மெய்யன்பர்களை அருணோக்கம் செய்தார்கள்.

**7 மணி**

வண்டிப் பாளையத்திற்கு அருகே யுள்ள தோட்டத்தில் சமாதிகொண்டருளிய குருமூர்த்திகட்கு சிறப்போடு நன்னீராட்டி அன்பர்களுடன் சென்று, காட்சிபெற்ற அன்பர்கட்கும் அருள் செய்து திருமடம் போந்தருளினூர்கள்.

**8-30 மணி**

ஈண்டு திருமடத்தில் திருக்கோயில் கொண்டருளிய 'முருகப்பெருமானூர்க்கு' திருநீராடல்செய்துஅமைத்திருக்க,

ஆண்டு வந்திருந்தாரெல்லாரும் கண்டு மகிழ்ந்து வாழ்த்தி வணங்க அடிகளார் அவர்கள் தம் திருக்கைகளால் திருநீற்றுச்செல்வந் தந்தருள் செய்தார்கள்.

**10-30** மணி

அடிகளார் பல பெருமக்கள் கூடிய பெருமன்றத்துள் சைவ அரசு செலுத்துவார்போன்று திருவோலக்கங் கொண்டருளினார்கள். அங்கு அவர்களின் இனிய திருவடிக்கமலங்கட்கு ஆராதனை நடந்தது. 'அரகர' வெனுமொலியோடு எல்லா அன்பர்களும் கண்டு மகிழ்வுற்றார்கள்.

அடிகளார் திருமுருகாற்றுப்படையின் பெருமையினைச் சுருங்க, விளங்க, இனிய, அழகிய, எளிய, தூய நடையில் சொற்சுவை, பொருட்சுவை தோய்தர, திருவாய் மலர்ந்தருளினார்கள். பின் ஆணையின்படி, கலாசாலை மாணவர்கள் அத்திருமுருகாற்றுப்படையாகிய திருமுறையினை ஓதியுவந்தனர். அடியார்கள் அன்பொடு கேட்டு மகிழ்ந்தார்கள்.

பிற்பகல் **3** மணி

உயர்திரு அடிகள் மன்றத்தில் வீற்றிருக்க, திருவாளர், வித்துவான். நடேச தேசிகர் அவர்களாலும், திருவாளர், வித்துவான். வை. குஞ்சிதபாதம் அவர்களாலும் திருவாளர், சுவாமிநாதபிள்ளை M. A. L. T, அவர்களாலும் தமிழ்மறை, ஓதப்பெற்றது.

தலைவர், திருவாளர், T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள் இன்னிசையியங்களின் ஒலியொடு மன்றத்திற்கு அழைக்கப்பெற்றார்கள்.

பொன்விழாக் குழுவின் தலைவராகிய திருவாளர், K. சீதாராம ரெட்டியார் B.A. B.L., M.L.A., அவர்கள் (மாநாட்டாண்மைக் கழகத்தலைவர்) முதலியார் அவர்களை 'பொன்விழா நிகழ்ச்சிக்குத் தலைவராக, தமது இனிய சொற்களால் முன்மொழிந்தார்கள்.

திருவாளர், சக்கரபாணி அய்யங்கார் B.A. B.L., (Public Prosecutor) அவர்களும், நெல்லூர் மாநாட்டாண்மைக் கல்வி நெறித்தலைவர், திருவாளர், ச. சச்சிதானந்தம் பிள்ளை B.A L.T. அவர்களும் மேற்கூறியதை ஆர்வத்துடன் வழிமொழிந்தனர்.

### தலைவர் அவர்களின் முன்னுரை

மடங்கள், அவைகளின் நிலைமை, ஞானியார்மடம், அடிகளாரின் பெருமை, திருநெல்வேலிக்குவந்த காலத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள், மதிக்காத பிறரையும் தன் வயமாக்கும் தலைமை, தங்கு தடையின்றி முருகப்பெருமான் அறிவுரையருளி யாங்கு இனிய மொழிகளால் எடுத்துரைக்கும் கனிவு தரும் சொற்களின் விளக்கம், ஆகிய இவைகளை அன்புடன், சுவைத்தும் தாம்பெற்ற சுவையினை அமைதியுடன் இத்தகையதென எடுத்துங் கூறினார்கள்.

### தந்திச் செய்திகள்

பொன்விழாச் சார்பாக பிற நாடுகளினின்றும் தமிழ் நாட்டுள் பல இடங்களினின்றும் வந்த தந்திச்செய்திகளையும் செயலாளர் தேவராஜ முதலியார் அவர்கள் படித்தார்கள்.

### கடிதச்செய்திகள்

பொன்விழாச் சார்பாகப் பலஇடங்களினின்றும் வந்த கடிதச் செய்திகளைச் செயலாளர் திருவாளர், நாராயணசாமி நாயுடு அவர்கள் படித்தார்கள்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினதும் சைவ சித்தாந்த சமாசத்தினதும், சபையினதும் ஆகிய வாழ்த்துரைகளும், பாக்களும், மாணவர்களின் வணக்கவுரைகளும் பாக்களும் பல புலவர்கள், பல தமிழ்ப்பெரியார்கள் கூறிய வாழ்த்து வணக்கவுரைகளும் படிக்கப்பெற்றன.

திருவாளர். A. அரங்கசாமி முதலியார் (Central Inspector of Municipalities and Boards) அவர்கள் மனைவியாரும் உயர்திரு ஞானியார் அடிகளாரின் மாணவிகளுள் முதன்மை பெற்றவரும் ஆகிய திரு. க. ர. ஆதிலட்சுமி அம்மையார் அவர்கள் அடிகாளாரிடம் கேட்டருளிய கந்தரநுபூதியின் உரையினை அச்சிட்டு பொன்விழாச் சார்பில் சுவாமிகளின் திருவடிக்கமலங்கட்கு உரிமையாக்கிய செய்தியை சென்னை ‘சாது’ அச்சுக்கூட நிலையத்தலைவர் திருவாளர் தியாகராச முதலியார் அவர்கள் பாராட்டிப் பேசினார்கள். உயர்திரு அடிகளாரும்தொடர்ந்து ‘பொன்மொழிகள்’ சிலபுகன்றார்கள்.

உயர்திரு ஞானியார் கலாசாலைக்கு முதல் நிதியாகவுற்ற தொகையோடு பொன்விழாச் சார்பாக இன்னும் 10100 வெண்பொற் காசுகளும், கரந்தைத் தமிழ்க் கல்லூரிக்கு 50 வெண்பொற் காசுகளும், வாலாஜாபாத்து, இந்துமத பாட சாலைக்கு 25 வெண்பொற் காசுகளும், பத்திரிகைகளில் 'சித்தாந்தம்' என்ற மாதப்பத்திரிகைக்கு அடுத்த மாதம் பதிப்புக்குரிய செலவும் 'நவசக்தி'க்கு 25 வெண்பொற் காசுகளும் 'சிவ நேசனுக்கு' 10 வெண்பொற்காசுகளும் தருவதாக மகிழ்ச்சியோடு அடிகளார் தெரிவித்தார்கள்.

விருத்த குமார பாலரான திருவிளையாடலைப் போல் அறுபதாம் ஆண்டு விழாவின் பின்னர் ஐம்பதாம் ஆண்டுவிழா நடக்கின்றதெனச் 'சமத்காரம்' தோன்றப் பேசினார்கள்.

பின்னர் ஆக்க மொழிகள் சொல்லியருளினார்கள் (துண்டு அறிக்கை)

**9-மணி**

பாடலேசுவரர் திருக்கோயில் வழிபாடு.

**19-11-1939 ஞாயிறு காலை 9 மணி**

பல புலவர்களும் பிறரும் பாடிய வாழ்த்துரைகளும் பாக்களும் படிக்கப்பெற்றன.

விழாத் தலைவர் பாட்டினுள் பொதிந்துள்ள நுண் பொருள்கள் பற்றிப் பேசினார்கள். பின்னர் தலைவரவர்களின் கருத்திற்கிணங்க திருவாளர் பண்டிதமணியவர்கள் தலைமை யேற்றார்கள். பண்டிதமணியவர்கள் நயம்தோன்ற இனிய தொரு முன்னுரையாக ஒருவிரிவுரை செய்தார்கள்

சேலம் நகராண்மைக் கழகக்கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் பண்டித க. திம்மப்பய்யரவர்கள் தாம் இயற்றிய "ஞானியார் ஆற்றுப்படை" என்னும் நூலைப் பல குறிப்புகளுடன் அரங்கேற்றஞ்செய்தார்கள். அவையத்தார் கேட்டு அகம் மிக மகிழ்ந்தனர். தலைவரவர்களும் பின் பற்றிப்பேசி அதிற்கண்ட சில சொன்னயங்களையும் எடுத்துக் காட்டினார்கள்.

பிற்பகல் 3 மணி

அன்பர்கள் தமிழ்மறை யோதிய பின்னர் சிலர் வட மொழிப்பாமாலைசூட்ட சிலர் பூமாலைபுனைந்து மகிழ்ந்தார்கள்.

திருவாளர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் மடம், மடத்தின் வரலாறு, பண்டைக்கால நிலைமை, இன்றைய நிலைமை, ஞானியார் மடலாயத் தொடர்பு, அடிக ளாரின் நிலை, அடிகளாரின் தலைமைப்பேறு, ‘பொன்விழா’ பொன்விழாவினைக் குறித்த பழையகால நிகழ்ச்சிகள் ஆகிய இவற்றையெல்லாம் அவையத்தார் செவிமடுத்தின்பமுற இனிய செந்தமிழ் நடையில் பெருமிதந்தோற்றும் தனித் தமிழ் மொழியில் கேட்பாருள்ளங் களிதுளங்கப் பேசியருளினார்கள். உடல் நலிவு குறித்து 35 நிமிடங்களில் சுருங்க வுரைத்தருளி னார்கள்.

திருவாளர், ச. சச்சிதானந்தம்பிள்ளையவர்கள், மடங்கள், வடநாட்டுமடங்கள், தென்னாட்டுமடங்கள், ஞானியார்மடத் தின்வரலாறு, முதல் குருமூர்த்திகளின்தோற்றம், பெற்றோர், திருநாமம், கல்வித்திறன், சொற்பொழிவாற்றல், சுற்றுச்செலவு (பிரயாணம்) சொற்பொழிவுகளின் எண்ணிக்கை, சென்ற ஊர்களின் எண்ணிக்கை யாகியவற்றை யெல்லாம் பற்றி மிக விரிவாகப் பேசினார்கள்.

விழாத்தலைவர் அவர்கள் முன்னவர்செய்தசொற் பொழிவு களில் உள்ள அரியகருத்துக்களைப்பின்பற்றிப்பேசியும் ‘இசை’ பற்றிய கருத்துக்களைக் கூறியும் தமது கருத்துரையைக்கூறி யருளினார்கள்.

செயலாளர் திருவாளர்—நாராயணசாமிநாயுடு அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

உயர்திரு அடிகளார் அன்போடு அருளாக்கப் பொருண் மொழி கூறியருளினார்கள். அடிகள்வாழ்த்துக்கூறுமுகத்தான் இறைவனைவாழ்த்தியருள, மன்றத்திலுள்ளார் சந்தனமுதலிய திருக்கை வழக்கம்பெற விழா இனிது நிறைவேறியது.

வித்துவான். வீர. அரங்கன்

ஞானியார் கலாசாலை, திருப்பாதிரிப்புலியூர்

தமிழ்ப்புலவர்,


## நா. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள்

மன்னார்குடி.

பிரமாதி, ஐப்பசி, முதல் நாள் இவ்வுலக வாழ்வை நீத்த மன்னார்குடி நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் இக்காலத்திய தலை சிறந்த தமிழ்ப்புலவர் களுள் ஒருவராவர். அரசாங்க வேலையிலமர்ந்து தங்கள் கடமையைச் செவ்வனே செலுத்தி நற்பெயரெடுத்ததோடு, தங்களுக்கு உவப்பான சில கலைப் பயிற்சியை மேற்கொண்டு தாம் மேற்கொண்ட அக்கலையில் மிக்கவராகி விளங்கிய சில தமிழ் நாட்டவருள் இவர் ஒருவராவர். இவ்வாறு விளங்கிய பெரியோர்களைப் பரந்தவுலகம் அறிந்து பயனடைதற்கில்லாது போதலும் உண்டு. இவ்வரிசையில் எண்ணூற்புலமையில் (Mathematics) தண்டல் துணைத்தலைவர் (Deputy Collector) இராமசாமி ஐயரை எண்ணுவோமானால், இயற்றமிழ்ப்புலமையில் நம்பிள்ளையவர்களையன்றி வேறு எவரையெண்ணக்கூடும்? இவ்வரிசையில் காலஞ்சென்ற மாணிக்க நாயக்கரவர்களை மறந்து விடுதற்கில்லை.

நமது பிள்ளையவர்கள் தஞ்சையில், தமிழ்ப்பற்றோடு, அரசாங்க அலுவலை மேற்கொண்டுவந்த ஒரு பழங்குடியைச் சேர்ந்தவராவர். இவர் தந்தையாராகிய நாராயணசாமி பிள்ளையவர்கள் சென்ற நூற்றாண்டிலிருந்த பெரும் புலவர்களில் ஒருவராவர். மன்னார்குடியில் அக்காலத்திலிருந்த ஒரு கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் புலவராக இருந்தார். தமிழில் பயிற்சியும் ஆர்வமும் மிக்குடையோராதலின் தமக்குக் கல்லூரியில் ஓய்வு கிடைத்தபோதெல்லாம், சுற்றுப் புறத்திலுள்ள ஊர்களுக்குச் சென்று தமிழ்நலம் பரப்பிவருவதுண்டு. இவரால் தமிழ் நலந் தெரிந்து, ஆர்வமிக்கடைந்து, தமிழையுந் தமிழ்ப் புலவர்களையும் போற்றிப்புரந்த நிலக்கிழவர்கள் பலராவர். இவரிடம் நெருங்கிப் பயின்று பிற்காலத்துச் சிறந்த புலவர்களாய்த் திகழ்ந்தோர் சிலர். பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்களும் இவர்களுடைய பழக்கத்தாலேயே தமிழ் பயிலத் தொடங்கியவராவர். அக்காலத்து இலக்கணப் பயிற்சியைத் தெளிவாக மாணவர்கள் மேற்கொள்ளச் செய்தவர் இவர்.

நமது பிள்ளையவர்கள் இளம்பருவத்திலேயே தம் தந்தையாரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்று நல்ல புலமை வாய்ந்திருந்ததோடு தமது பதினாறுவது ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத் தாய்த் தேர்வில் (Matriculation Examination) தேறினார். இளமையிலேயே தந்தையாரை இழக்க நேர்ந்தமையினால் மேற்கொண்டு ஆங்கிலக்கல்லூரியிற் பயில இயலவில்லை. இவரது புலமையை நன்குணர்ந்த கல்லூரித் தலைவர்கள் இவரது இளமையையுங் கருதாது, இவர் தந்தையார் பார்த்துவந்த தமிழாசிரியர் வேலையை இவரிடம் ஒப்புவித்தார்கள். சிலகாலம் கல்லூரி ஆசிரியராகவிருந்து பின்னர் கல்லூரி அவ்வூரினின்றும் எடுக்கப்பெற்றமையின்,



இலக்கணப் புலவர்

மன்னார்குடி- நா. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள்

[1869—1939]

அவ்வாசிரியர் பதவியினின்றும் விலகிக்கொண்டார். இவர் கல்லூரித் தமிழாசிரியராக அமர்ந்திருந்தது இற்றைக்குச் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாகும். பின்னர் தனது பத்தொன்பதாவதாண்டில் அரசாங்கத்தின் அறக்காவற்பகுதியில் (Police Department) சேர்ந்து, ஐம்பத்தைந்தாவ தாண்டுவரையில் வேலைபார்த்து, ஓய்வு பெற்றார். அறக்காவற்றுணைக் கண்காணியாக (Police Sub-Inspector) இவர்கள் வேலைபார்த்துவந்த பொழுது எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்று வந்தார். அறப்பயிர் வளரவொட்டாத மறக்கிளைகள் எங்கேனும் தஞ்சை சில்லாவில் காணப் படின் அங்கு நமது பிள்ளையவர்களையனுப்பி அறப்பயிர் வளர்த்ததுண்டு. பெருங்கொள்ளைக் கூட்டத்தார்களெல்லாம் இவரால் அடக்கப்பெற்றனர். தம் அறக்காவலில் அதற்கு எதிராக வந்தோரது செல்வத்தையும், செல்வாக்கையும், இவர் பொருட்படுத்தியதில்லை. தாம் வேலையினின்றும் ஓய்வு பெற்ற பின்னர் சிலகாலம் மன்னார்குடியிலேயே தமிழாசிரியராகச் சில ஆண்டுகளிருந்து பிறகு வேறொரு அலுவலையும் மேற்கொள்ளாது தானே தமிழ் பயில்வதும் பிற அன்பர்களுக்கு அதன் நயங்களை எடுத்துக் கூறுவது மாகக் காலங்கழித்துவந்து இரண்டு ஆண்டுகளின் முன்பு பக்கப் பிடிப்பு நோயால்(Paralysis) பிணிப்புற்றுத்தமது எழுபதாவதாண்டில்இறைவனடி சேர்ந்தார்.

நமது பிள்ளையவர்கள் பிறந்து மொழி பயின்றகாலந்தொடங்கி இறுதி காறும் தமிழ்ப் பயிற்சியை மேற்கொண்டு வந்தவராவர். அறக்காவற்றொழி லில் பல இடர்களுக்கெல்லாம் உட்பட்டு உயிர் இழக்கக் கூடிய நெருக்கடி களில் அகப்பட்டு வந்த காலத்தும் தமிழ்நூற் பயிற்சியை விட்டவரல்லர். தமக்கு நூற்பயிற்சியிலுள்ள வேட்கையால் கடமையில் ஒருசிறிதும் சோம்பி யிருந்தவருமல்லர். இடையிடையே கிடைத்த ஓய்வு நேரங்கள் எவ்வளவு சிறியதாக இருப்பினும் வீணே போக்காது நூற்பயிற்சியிற் செலவிட்டு வந்தார். ஒருகாலத்து, கள்வர் கூட்டத் தலைவன் ஒருவனால் உடம்பில் பல இடங்களிலும் அரிவாளால் வெட்டப்பட்டு உணர்விழந்து விழுந்தார். அவ்வாறு அவன் தம்மை வெட்டிய காலத்தும் தம் கைப்பிடியினின்றும் அவன் தப்பியோடாதபடி பிடித்துக்கொள்ளவே இவர் கீழே விழுந்தாலும் அருகிருந்தவர்கள் அவன் ஓடாது பற்றிக் கொண்டனர். பிறகு இவரை மருத்துவசாலையிற் கொண்டுவந்து சேர்த்தார்கள். சிறிது உணர்வு வந்த வுடனே தம் பையைத் தேடினார். அருகிருந்த இவருடைய தலைவர் என்ன தேடுகிறாய் எனக் கேட்க 'பையில் தொல்காப்பியம் வைத்திருந் தேன் அதனைப் பார்க்கின்றேன்' என்றார். 'ஆவி அகத்ததோ புறத்ததோ என்கின்ற நிலையில் அந்நூல் உனக்கு என்ன பயன்தர வல்லது' என்று அவர் தலைவர் கேட்டார். உடனே நம் பிள்ளையவர்கள் 'என் வாழ்க் கையில், கடமையை அறிவேன், தமிழை அறிவேன். இப்போது கடமையை ஆற்ற வன்மை யற்றிருக்கின்றேன். உணர்வு வந்து விட்டதே! உயிர் தங்கியிருக்கின்றதே! தமிழை விட்டு எவ்வாறு பிரிந் திருப்பது'' எனக்கூறி, அச்சுவடியைக் கொண்டுவரச்செய்து அருகே வைத்துக் கொண்டார். மருத்துவசாலையில் படுக்கையிற் கிடக்குங்காலும்,

உணர்வு வந்தபோதெல்லாம் அந்நூலைப் படிப்பார். சென்ற ஆண்டு வாய் பேசமுடியாமலும், இருந்த இடத்தினின்று எழுந்திருக்க முடியாமலும் பக்கப்பிடிப்பிணியாற் பிணிப்புண்டிருந்தகாலத்து இவரைப் பார்க்கச்சென்ற ஒரு நண்பரிடம், படுக்கையிற் றலைக்கணையாக வைத்திருந்த தமிழ்ப்புத்தகங் களைக் காட்டி, அன்று காலை தாம் படித்த பகுதிகளையும், கைக்குறியாற் காட்டினர். நமது சங்க வெளியீடாகிய கரந்தைக் கட்டுரையைப் பார்த்து அவர் மகிழ்ந்ததற்கு அளவேயில்லை. புதிதா வந்த இலக்கண நூல்கள் எவையாயினும், அவற்றை விடாது படிப்பார். இளைஞர் இலக்கண முதல் தலை சிறந்த தொல்காப்பிய ஆராய்ச்சி வரை இவர் படியாதது ஒன்றுங் கிடையாதென்று திண்ணமாகக் கூறலாம்.

இத்தகைய பெரும்புலவர் அரசாங்க வேலையிலமர்ந் திருந்தமையால் தமிழுலகம் இவரது புலமையைத் தக்கவாறுணர்ந்து பயனடைதற்கில்லாது போயிற்று. தமிழ்ப்புலவர்களுட் சிறந்தவர்கள் பலரும் அறிவர். அவ்வாறு அறிந்த புலவர்களும் இவரை இலக்கணப் புலமை நிரம்பிய பேரறிவாளர் என்றும், கம்பராமாயணப் புலமை நிரம்பியவர் என்றுமே அறிந்து கொண் டார்களன்றி, ஏனைய சிறப்பையும் புலமையையும் தக்கவாறு அறிந்தாரல்லர். இவ்வாறு பிறரறியாமைக்குக் காரணம் இவரது உயர்ந்த பண்பும் அடக்க முமே யாகும். தான் எவ்வளவு பயின்றிருந்தும் 'நூல் பல பயின்றோம்' என்ற உணர்ச்சி ஒரு சிறிதும் இன்றிப் 'பயில வேண்டுவ பலவுளவே, நாள் கழிகின்றதே' என்றே நினைந்து வந்தார். எவருடனும் அவர் உரையாட நேர்ந்தபொழுது தமிழில் அன்புடையவராகமட்டில் தம்மைக் காட்டிக் கொண்டு, அவ்வாறு பிறரும் அன்புடையவராக, ஆகவேண்டுமென்று ஊக்கு வாரேயன்றித் தம்மை ஒரு பெரும் புலவராகப் பிறர்க்குத் தோன்றும்படி ஒரு சிறிதுங் காட்டிக்கொள்ள மாட்டார். புலவர்களோடு உரையாடுங்கால் அவர்கள் சொல்லும் நல்லுரைகளைக் கேட்டு மகிழ்வாரேயன்றித் தம் புல மையை வெளிக்காட்டும் வகையில் பேசவேமாட்டார். எவரேனும் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களின் கருத்துக்களை நன்குணராது பேசுவார் களாயின், அவர்கள் பேசி முடிந்தவுடன் அத்தகைய பிழைகள் திருத்தப் பெறாது மக்களிடைப் பரவுமாயின் தமிழ் நலம் மாசுபடுமே என்ற நோக்கத் தால்மட்டும் திருத்த முன்வருவார். மதுரைத் தமிழ்ச் சங்க முதலாவது ஆண்டுவிழாவில் பல புலவர்கள் சேர்ந்து தனித்துப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அக்கூட்டத்திலிருந்த ஒரு சிறந்த இலக்கணப் புலவர் சில இலக் கணக் கருத்துக்களை நன்கு ஆராயாது கூறினர். உடனிருந்த நம் பிள்ளை யவர்கள் ஏதோ சில சொல்லத்தொடங்குமுன், அப்பெரும் புலவர் 'நாம் பேசுவது இலக்கணப் புலவர்களே ஆராயத்தக்கது' என்று கல்விச் செருக் கோடுகூறி இவரை வாளாவிருக்க விரும்பினர். இவர் இயற்கையான பணிவுடனும், பண்புடனும், தெளிவுடனும் 'தாங்கள் கூறுவது உண்மையே. தங்கள் கூற்றை மறுப்பது என் நோக்கமல்ல. என் போன்ற புலவரல்லா தார் தாங்கள் கூறும்பொருளை இவ்வாறு உணர்ந்ததுண்டு எனக் கூறி அப்புலவர் சொன்ன கருத்தைமறுத்து ஆசிரியர் கருத்து இன்னதெனத் தெளிவாகக் கூறினர். பின்னர் இவரது இலக்கணப் புலமையைக் கூடி

யிருந்த புலவரெல்லாம் போற்றினார்கள். இது நிகழ்ந்தது ஏறக்குறைய நாற்பதாண்டுகட்கு முன்பு. இந்நிகழ்ச்சியினால் இவரைப் புலவரெனத் தெரிந்து கொண்டவர் ஒரு சிலர்.

சங்கநூற் பயிற்சியில் மிகச் சிறந்தவரென்பதனை எட்டுத்தொகை நூல்களுட்பல வெளிவராததற்கு முன்பே அவற்றைத் தம்கையினாலேயே யெழுதிப்படித்து வந்ததனாலேயே அறியலாம். இவர் தம் கையினாலெழுதிய அகநானூறையும், நற்றிணையையும், பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்களுக்கு உதவினார். பன்னிரு திருமுறைகளையும் நன்குபயின்று அவற்றிற் காணப்பெறும் பொருணயங்களையும், சங்கநூற்கருத்துக்களோடு ஒத்த கருத்துக்களையும் அரிய இலக்கண வழக்குக்களையும் குறித்துவைத்திருந்தார். புராண இலக்கியங்களை நன்கு கற்றுத் தம்முடைய இருபதாவது வயதிற்கு முன்பே 'இனிய புராணப் பிரசங்கி'யாக விளங்கினார். திருமுறைகளின் பண்முறைகளை நன்கு பயின்றிருந்ததோடு தாமே இனிமையாகவும் பாடுவார். இளைஞர்களைத் தம்மருகேகூட்டித் திருமுறைகளை முறையாகப் பாடுதற்குப் பயில்விப்பது ஒரு காலத்தில் அவருடைய இனிய பொழுது போக்காக இருந்தது. சைவ சித்தாந்த நூல்களை ஐயந்திரிபறப் பயின்ற அவர் பெருமையை அறிந்தவர் மிகச்சிலரேயாவர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் உண்மை ஞானி என்று மதிக்கப்பெற்ற நாகப்பட்டினம் வீரப்பச் செட்டியார் என்னும் பெரியாரிடம் முறையாக உடனிருந்து மூன்றாண்டுகள் சித்தாந்த நூல்களைப் பாடங்கேட்டுவந்தார். அப்பெரியாரைப் பாடமுடிவில்இவர் வாழ்த்திப்பாடியபோதுஅவர் "முன்பு என்னைப்பாடியவனும் ஓர்சுந்தரன். இப்போதுபாடுபவனும் ஓர்சுந்தரன்" எனக்கூறினாராம். தமிழிலக்கணங்களைக் கற்றதோடமையாது, ஆங்கில இலக்கண நூல்களையும் நன்கு கற்றிருந்தார். பெயின் (Bain's English Grammar) என்பாரெழுதிய ஆங்கில இலக்கணத்தை விதி, விதியாகப் பாராமற்கூறுவர். வடமொழிப்புலவர்களோடு நெருங்கிப்பழகி வடமொழி இலக்கண அமைப்புக்களையும், ஆகமங்களின் கருத்துக்களையும் தனக்கு வேண்டிய அளவில் ஒருவாறு தெரிந்து வைத்திருந்தார்.

இவருடைய தமிழ்ப்புலமை பவானந்தம்பிள்ளை, நமசிவாய முதலியார் இவர்கள் பதிப்பித்த இலக்கண நூல்களுக்கு உதவியாக இருந்ததுண்டு. தஞ்சை மருதமுத்து உபாத்தியாயர், குடவாயில் சண்முகம் பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமிஐயர், அரசஞ்சண்முகனார், மகாமகோபாத்யாய டாக்டர் சாமிநாதையர், வித்துவான் இராகவையங்கார், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், மகாமகோபாத்யாய இராமானுசையங்கார் முதலிய பெருந் தமிழ்ப் புலவர்களுக்கு இவருடைய புலமையில் நல்லமதிப்பு உண்டு. இவரைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் "இத்தகைய பெரும் இலக்கணப்புலவர் ஒன்றிரண்டு நூற்றாண்டுகளில் ஒருவர்தான் தோன்றக்கூடும். இவரது இலக்கணப் பயிற்சியையும் தெளிவையுங்கண்டு நாம் வியப்பதா? இவர் புலமையைத் தெரிந்து கொள்ளாத தமிழகத்தை வியப்பதா!" எனக் கூறியது இங்கு

நினைவிற்கு வருகிறது. தொல்காப்பியச் சொல்லதிகார ஆராய்ச்சிக் குறிப்பிற்கு இவர் தமிழ்ப்பொழில் வழியாக எழுதிவந்த மறுப்பில் அமைந்திருந்த இலக்கண நுட்பங்களைப்பார்த்த மகாமகோபாத்யாய டாக்டர் சாமிநாதையரவர்கள் "இவ்வரிய இலக்கண நுட்பங்களை யெல்லாம் மறுப்புரையில் எழுதுவதைவிட தனியாக இவர் ஒருஅரிய உரை எழுதுவது நலமாகுமே" எனத் தெரிவித்தார். பட்டுக்கோட்டையில் இருப்தாண்டு கட்கு முன்னர் இவரோடுஒருநாள் மட்டுமே பழகிய காலஞ்சென்ற மாணிக்க நாயக்கரவர்கள், நெடுநாட் கழித்து சில புலவர்களோடு அளவளாவிக் கொண்டிருந்தபொழுது "பொதியமலையில்அகத்தியரைக்காணச்சென்றேன். அங்கு அவர் அடிச்சுவடுங் கண்டிலேன். எதிர்பாராத இடத்தில், எதிர் பாராத உருவத்தில் தொல்காப்பியரைக் கண்டேன்" எனக்கூறினர். எங்கு எவ்வுருவில் எனக்கேட்ட அன்பர்களுக்கு "பட்டுக்கோட்டையில் ஒரு அறக்காவற்றுணைக் கண்காணி (Police Sub-Inspector) உருவில்" என விடைபகர்ந்து இவருடைய புலமையைப் பாராட்டினர்.

நம்பிள்ளையவர்கள் நண்பர்களிடத்துஎளிமையாகவும், இனிமையாகவும் பழகும் இயல்புடையவர். தாம் கண்ட அரிய நுட்பங்களையெல்லாம் உரையாடிக்கொண்டிருக்கும் காலங்களில் எளிதாக நண்பர்களிடம் சொல்லி மகிழ்வார். தேவாரப் பாக்களைப் பொருட்சுவை ததும்பி மெய்ப்பாடு தோன்ற இனிமையாகப் பாடுவார். தம்மிடம் பாடங் கேட்பார்க்குத் தோன்றும் ஐயங்களைப் பலவகையான மேற்கோள்களால் விளக்கித் தெளி விப்பார். தம்மிடம் வந்த புலவர்களை ஆதரிக்கும் வண்மை மிகவுடையவர். பொருட் செல்வம் குன்றித் தாம் வாடிய காலத்தும் இவருடைய பரந்த வுள்ளம் ஒரு சிறிதும் சுருங்கி அறியாது. தமக்குரிய பொருண் முட்டுப் பாட்டை நெருங்கிய நண்பர்களிடமும் வாய்விட்டுச் சொல்லக் கூசுவார். இவர் உள்ளத்தால் ஒரு வள்ளலேயாவார். நூல் நுட்பங்களைப் பற்றிப் பேசுவதையே விரும்புவார். பிற பேச்சுக்கள் மிகமிகக் குறைவாகும். எவரையும் சிறியவராகக் கருத மாட்டார். தமிழ் பயில விரும்பினுல் எப்பொழுது அணுகினுலும் தம்முடைய வசதியை ஒரு சிறிதுங் கருதாது உடனே பாடஞ் சொல்லத் தொடங்குவார். இவருடைய அறுபத்தைந் தாவது வயதில் நள்ளிரவு பத்துமணிக்குமேல் ஒருமணிவரையில் இவரிடம் பாடங்கேட்ட மாணவர்களும் உண்டு.

இப்பெரும் புலவரது ஆராய்ச்சி நலன்களையெல்லாம் தமிழ்நாடு தக்க வாறு பெறுதற்கில்லாமற் போனது பெரிதும் வருந்தத் தக்கதேயாகும். செந்தமிழ்—பழந்தொகுதிகளில் உள்ள சில கட்டுரைகளும், தமிழ்ப் பொழிலில் வெளிவந்துள்ள கட்டுரைகளும், மறுப்புரைகளும் அன்றி இவரது புலமையைக் காண்பிக்கக்கூடிய எழுத்துக்கள் இல்லையென்றே கூறிவிடலாம். இவரது உழைப்பின் பயனுகக் குறித்து வைத்திருந்த குறிப்புக்களையெல்லாம் பேணிவைக்கவேண்டியது தமிழ்ப் புலவர் கடமை யாகும். இவரது பிரிவால் நாமும் தமிழகமும் அடைந்துள்ள துன்பத்தை இவருடைய உற்றுருக்குத் தெரிவித்து இவர் என்றும் இறைவன்றிருவடி நீழலில் அமர்ந்திருப்பாராக என ஆண்டவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

நீ. கந்தசாமிபிள்ளை, தஞ்சை.

# தமிழ்ச்செய்திகள்

## கரந்தைத் தமிழ்ச் சங்கம்

29-10-39 மாலை சங்கத்தின் உறுப்பினர் பொதுக்கூட்டம் நடந்தது.

1938—39ஆம் ஆண்டின் வரவு செலவு கணக்கும் சோதனை அறிக்கையும் ஏற்கப்பெற்றன.

தமிழ்ப் பெருமன்றம் முதலிய இடங்களில் மின்னொளி வைத்த செலவு ரூ. 743—5—1, திக்கற்ற மாணவரில்லத்திற்கு இடம் வாங்கிய செலவு ரூ. 1747—3—5, தொழிற்பயிற்சிக் கட்டிடம் கட்டும் செலவு ரூ. 703—14—10, 28-ஆம் ஆண்டு விழாச்செலவு முதலியன ஏற்கப்பெற்றன.

திக்கற்ற மாணவரில்லத்திற்கு இடம் வாங்குவதன் செலவில் ஒரு பாதியை அரசியலார் தருவதாகக் கூறிய வாக்குறுதியைக் காங்கிரசு அரசியற்றலைமை ஏற்ற உடன் மறுத்து விட்டனர். ஆகவே முழு விலையும் சங்கமே மேற்கொள்ள நேர்ந்தது.

1939—40-ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம். அதாவது 1940 சனவரி மாதம்வரை முடியும் ஆண்டிற்குரியது ஏற்கப்பட்டது.

மருத்துவசாலை ரூ. 123—1—6; தோட்டம் ரூ. 157-15-1 தமிழ்ப்பொழில் ரூ. 187—10—0; ஆக இனம் மூன்றிலும் ரூ. 468—10—7 வரவுக்குமேல் செலவு ஆகியிருக்கின்றது.

திக்கற்ற மாணவர் இல்லத்துக்கு வைப்பு நிதியாகக் கிடைத்த ரூ. 1700-ல் ரூ. 700—0—0 வரை சங்க நடை முதல் செலவு செய்திருப்பதை ஈடு செய்து முதல் தொகையின் குறையை நிரப்புதற்கு ரூ. 700—0—0 வேண்டியிருக்கின்றது.

புலவர் கல்லூரி இந்த ஆண்டு நடப்பதற்கான பொருள் கைவசம் இன்மையால், வைப்புநிதியாகவைக்க எண்ணியிருந்த ஆயிரரூபா நன்கொடையைக்கொண்டு இந்தயாண்டில் இரண்டு வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன. 1940 சனவரிமுதல் சூன் முடிய இதுபோது நடந்துவரும் இரண்டு வகுப்புகட்கும் ரூபா 1500—0—0யும், 1940 சூலை முதல் 1941 சனவரிவரை

நடைபெறவேண்டிய மூன்று வகுப்புகட்கும் ரூபா 2000—0—0 யும் ஆக ரூபா 3500—0—0யும் இப்போதே ஆக்கிக்கொள்ள வேண்டியிருக்கின்றது. அடுத்தஆண்டிற்குள்ளாகத் தகுதியுள்ள மற்றொரு ஆசிரியரையும், இடவசதியையும் தேடிக்கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. சங்கம் மேற்கொண்டுள்ள இந்நன்முயற்சியைத் தமிழன்பர்கள் தத்தம் கருமமாக எண்ணி 1940-வது ஆண்டிற்குள் ரூபா நாலாயிரமாகிலும் சேர்ப்பதற்கு வேண்டுவன புரிதல் வேண்டும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் வித்துவான் தேர்வுக்குத் தலைப்படும் மாணவர் 25 வயது நிரம்பியவராதல், பல்கலைக்கழகத்தின் ஒப்புதலை (Approval)ப்பெற்ற கல்லூரியிற் பயின்றவராதல் வேண்டுமென்பது விதி. தேர்வை நாடும் மாணவரின் வயதை 22 வரையிலாதல் குறைக்கவேண்டுமென்ற விண்ணப்பத்தைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவினர் (Syndicate) மறுத்து விட்டனர். கரந்தைப் புலவர் கல்லூரியை ஒப்புதல் செய்ய வேண்டுமென்ற விண்ணப்பத்தையும் அன்னார் மறுத்துவிட்டனர். புலவர் தேர்வுக்குமாணவர் பயில்வதற்கான கல்விநிலையம் தமிழ்நாட்டில்ஒன்றுதான் உளது. ஆண்டு எல்லோரும் இடம்பெறுவதும் அரிதாயிருக்கின்றது. இந்நிலையில் புலவர் கல்லூரியை ஒப்புதலும் செய்யாது, தேர்வுவயதைக் குறைக்கவும் மாட்டாது வன்கண்மைபுரிவது நேரிய செயலன்று; இக்குறைபாட்டைக் கருத்தில் வைத்துத் தமிழன்பர் ஆவன புரிவாராக.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் ஒத்த நோக்கமுடைய ஏனைய சங்கங்கள் இணைத்துக்கொள்ளுதற்கான விதிகள் சங்கப் பேரவையினரால் 29-10-39 தேதியில் ஏற்கப் பெற்றன. அவ்விதிகள் இதனடியில் குறிக்கப் பெறுகின்றன. நூறு சங்கங்களாகிலும் இவ்வாறு இணைத்துக் கொண்டால் தமிழ் வளர்ச்சிக்கான துறைகளில் முயன்று ஆக்கந்தேடுதல் கூடும்.

### ஏனைய சங்கங்களை இணைத்துக்கொள்ளுதற்கான விதிகள் :—

அ. இச்சங்கத்தின் நோக்கங்களுடன் ஒத்த கருத்துடைய வேறு சங்கங்களும் ஆண்டுதோறும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு இணைப்புக் கட்டணம் ரூபா மூன்று தருவதாக ஒப்புக்கொண்டு இச்சங்கத்துடன் இணைத்துக்கொள்ளலாம்.

ஆ. இணைப்புக் கட்டணத்தை ஒவ்வொரு ஆண்டின் முடிவிற்குள் செலுத்தவேண்டும்.

இ. கட்டணத்தைச் செலுத்தாது ஒரு ஆண்டுத்தொகை நிலுவையாயிருந்தாலும், இணைப்பினுலுளதாகும் உரிமைகள் கிடையா.

ஈ. இணைக்கப்படும் சங்கங்கள் ஒவ்வொரு உறுப்பினரைத் தேர்ந்து இங்கு அனுப்பவேண்டும்; இங்கு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொழிற் கூட்ட உறுப்பினர்களும், இணைக்கப்பெற்ற சங்கத்தினரால் தேர்ந்தனுப்பப் பெற்ற உறுப்பினர்களும் ஒருங்குகூடித் தமிழின் ஆக்கத்திற்கான வேலைத் திட்டத்தையும் அதனைச் செய்து முடிக்கும் வழிதுறைகளையும் அமைத்து அவற்றை நிறைவேற்றவேண்டும்.

உ. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பெறும்நூல்கள் முதலியவற்றை இணைப்புச் சங்கங்கட்கு விலை இன்றியோ நயமான விலைக்கோ கொடுக்கலாம். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொழிற் கழகத்தினர் இது பற்றிய முடிபுகளைச் செய்தற்குரியர்.

ஊ. இணைப்புச் சங்கங்கட்கு, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சி முதலியவற்றில் எவ்வித தொடர்பும் உரிமையும் கிடையாது.

எ. இணைப்புச் சங்கங்கள், தாம் செலுத்தவேண்டிய ஆண்டுவரியைக் கொடுக்காமல் மூன்று ஆண்டு வரித்தொகை நிலுவை நின்றால், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தொழிற் கழகத்தினர் அச்சங்கங்களின் இணைப்பை அறுத்து விலக்கி விடலாம்.

**கரந்தைப்புலவர்கல்லூரி:**—இதன்கண் நடந்துவரும் இரண்டு வகுப்புகளின் காலாண்டுத்தேர்வு அக்டோபர் 5, 6, 7 நாட்களில் நடைபெற்றது.

**கரந்தைக் கல்லூரியின் 23-வது ஆண்டுவிழா:**—அக்டோபர் 20, 21, 22 நாட்களில் நிகழ்ந்தது. கலைமகள் விழாவைச்சார்ந்து நடைபெற்றுவரும் இச்சிறப்பின் முதலாவது நாளில் மாணவர்களின் பந்தயவிளையாட்டு நடைபெற்றது. இரண்டாவதுநாளில் மாணவர்களின் வினைத்திறன் முற்றிய ஓவியம், சிற்பம் முதலிய செய்பொருள்களை நிரல்பட வைத்திருந்த கண்காட்சிக்கூடம் திறக்கப்பெற்றது. பஞ்சாபகேசன் கழக அறிக்கை படித்த பின்னர் மாணவரின் சொற்பொழிவுகளும், 'MEERABAI' என்ற ஆங்கில நாடகமும் நடந்தன. மூன்றாவது நாளில் திருவாளர், கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளையவர்களின் சீரிய தலைமையில் கல்லூரியின் ஆண்டுவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அதுபோது, 'சேக்கிழார் கவிநயம்' என்ற பொருள்பற்றி அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் விரிவுரையாளர் திரு. **அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள்** M. A., சிறந்த விரிவுரை ஆற்றினர். கல்லூரித் தலைமை ஆசிரியர் திரு சிவ. குப்புசாமி பிள்ளையவர்கள் இயற்றிய "கோப்பெருந்தேவியார்" எனும் நாடகத்தைச் சங்க மாணவர்கள் தீந்தமிழ்ச் சுவைமல்கவும், மெய்ப்பாடு விளங்கவும் நடித்துப் பேரவையை இன்புறுத்தினர்.

---

**சென்னைப்பல்கலைக்கழகம் :**—28-10-39உ குழுமியபேரவையினர் (Senate) தமிழகராதியொன்று தொகுக்க வேண்டுவதென முடிவு செய்தனர். இவ்வேலையின் நோக்கத்தையும், விவரங்களையும் விளக்கிக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் போன்றகழகத்தில் இதனை ஒப்புவிப்பது நன்று.

---

**ஓர் துயரம்:**—ஐப்பசி 1உ யன்று சங்கத்தின் பேரன்பர் திரு. **ம. நா. சோமசுந்தரம் பிள்ளை** அவர்கள் காலஞ்சென்றதுபற்றி சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் செய்தமுடிபு.

தமிழ் மொழியில் மிகச்சிறந்த புலவர்களுள் ஒருவராகிய திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் (பிரமாதி ஐப்பசி 1உ புதன்கிழமை காலை 9 மணிக்கு) காலஞ்சென்றது குறித்து இச்சங்கம் மிக்க துயரில் ஆழ்கின்றது.

இச்சங்கத்தின் அரிய அன்பர்களுள் ஒருவராகிய அப்புலவர் தமது அரிய ஒப்பற்றஇலக்கணப்புலமை மிளிரப்பலகட்டுரைகள் எழுதியுதவிய நன்றியினை இச்சங்கம் என்றும் மறப்பதற்கில்லை. சங்கத்திற்கு அருந்தொண்டுகள்செய்துவந்து ஆவியுலகிற்புக்கும் சஙகவாழ்வினைக் கருதிநிற்கும் அரிய தமிழ்மணிகளுள் ஒன்றாக அவர்களை இச்சங்கம் கருத்திற் பதிந்து கொள்ளுகின்றது.

---

**திருவையாறு, திருவள்ளுவர் தமிழ் மாணவர் கழகம் :**— தமிழெனுங் கடலில் அறிவெனும் புயலால் முகந்து இயற்றமிழெனும் இன்னீரதனைப் பாரதிற் பொழிந்த பண்புடைத் தோன்றலும், தனக்கிணையில்லாத்தண்டமிழ்ப்புலவரும், தமிழ்த் தாயின் தண்ணருளாற் றரணியிற்றோன்றியவரும் ஆகிய **ம. நா. சோமசுந்தரம்பிள்ளை** அவர்கள் காலஞ்சென்றதைக் குறித்து இக்கழகம் மிக வருந்துகின்றது. அக்குடும்பத்தார்க்கும் தமது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

## புத்தக மதிப்புரை

**இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும் :—** தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் படித்து உண்மை காண்பதற்கு ஏற்றதொரு கருவி நூலாகும். நட்பு, பகை, நொதுமல் ஒன்றுமின்றி நடுநின்று ஆய்தலின்றி, கட்சிச்சார்புகளால் இந்திப்படிப்பின் விளைவுகளை அறியமாட்டாது தமிழ்மக்கள் பேதுறுகின்றனர். வித்துவான், **மறை. திருநாவுக்கரசர்** இருசாரார் கொள்கைகளையும் செவ்விதின் ஆய்ந்து, தமிழ் மொழியும், தமிழ் நாகரிகமும், தமிழ் மக்களும் கெட்டொழிவதற்கு இந்திக்கல்வி காரணமாகும் எனத் திறனுடன் நாட்டியிருக்கின்றனர். இவ்வரிய நூலைத் தமிழுலகு நன்றியுடன் போற்றிப் பயன் கொள்ளுமென எண்ணுகின்றேம்.

சேலம், தமிழ்நெறிவிளக்கப் பதிப்பகத்தார் இத்தகைய நூல்களை வெளியிட்டு வருவது ஒப்புயர்வற்ற தமிழ்த் தொண்டாகும். இதன் விலை நான்கணு.

---

**திருக்குறள் நாட்குறிப்பு : 1940 :—** திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தினரால் இயற்றி வெளியிடப்பெற்றது. பஞ்சாங்கம், தபாற்குறிப்புக்கள், திருநாட்கள், விடுமுறைநாட்கள் முதலிய இன்றியமையாத விவரங்கள் அடங்கியது. 731-வதுகுறள்முதல் 1096வது குறள்முடிய கருத்துரையுடன் குறிக்கப்பட்டுளது. வழுவழுப்பான நல்லதாளில் கவின்பெற அமைந்திருக்கிறது. இதன் விலை ரூ. 0-5-0, 0-6-0.

---

**புதுநெறித் தமிழ் இலக்கணம் I**<br>
,, ,, ,, II<br>
,, ,, ,, III

இவை வித்துவான் ஔவை **சு. துரைசாமிப்பிள்ளை** அவர்களால் இயற்றப் பெற்றவை. திருவத்திபுரம் இலட்சுமி நூற்பதிப்பகத்தினரால் வெளியிடப் பெற்றவை. வித்துவானவர்கள் தமக்குள்ள நீண்ட ஆசிரியப் பயிற்சியினுல் மாணவர்கள் எளிதே இலக்கண நுண்பொருள்களை மனத்தில் அமைத்துக் கொண்டு திறனுறும் வண்ணம் புதுமுறையில் எழுதியிருக்கின்றனர். இளைஞரின் இலக்கணப் பயிற்சிக்காக இதுகாறும் வெளிவந்திருக்கும் நூல்களுள் இது மிகச் சிறந்ததெனமதிக்கின்றேம். பள்ளிக்கூடத் தலைவர்கள் இவ்வெளியீடுகளின் சிறப்பியல்களை அறிந்து இவற்றை ஆதரிப்பார்களாக.

| | | |
|---|---|---|
| I | வது புத்தகம் | அணு 4 |
| II | ,, | ,, 6 |
| III | ,, | ,, 12 |

## நன்கொடை

### கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு

திருவாளர்கள்,

| | | | |
|---|---|---|---|
| த. பொ. கை. அழகிரிசாமி பிள்ளை அவர்கள் (மக்கள் திருமணத்திற்காக) | 3 | 8 | 0 |

### ஞானியார் அடிகள் பொன்விழாவிற்குதவியது:—

| | | | |
|---|---|---|---|
| K. தியாகராச பிள்ளை B. A., பம்பாய் | 25 | 0 | 0 |
| அ. கணபதி பிள்ளை, திருச்சிராப்பள்ளி | 25 | 0 | 0 |
| சங்க உறுப்பினர் | 25 | 0 | 0 |
| நா. கந்தசாமி பிள்ளை, தஞ்சை | 5 | 0 | 0 |
| G. இராமசாமி பிள்ளை, கரந்தை | 5 | 0 | 0 |
| த. பொ. கை. அழகிரிசாமி பிள்ளை, தஞ்சை | 3 | 0 | 0 |
| K. விசுவநாத பிள்ளை ,, | 2 | 0 | 0 |
| சிவ. குப்புசாமி பிள்ளை, கரந்தை | 1 | 0 | 0 |
| T. A. சிவசங்கரம் பிள்ளை, தஞ்சை | 1 | 0 | 0 |

### புலவர் கல்லூரிக்கு

| | | | |
|---|---|---|---|
| சங்க உறுப்பினர் | 25 | 0 | 0 |
| வித்துவான் அ. கிருட்டினமூர்த்தி, வித்துவான் C. இலக்குவனர் வழி | 20 | 0 | 0 |
| த. பொ. கை. அழகிரிசாமி பிள்ளை (மக்கள் திருமணத்திற்காக) | 3 | 8 | 0 |

### திக்கற்ற மாணவரில்லத்திற்கு

| | | | |
|---|---|---|---|
| த. பொ. கை. அழகிரிசாமி பிள்ளை, தஞ்சை (மக்கள் திருமணத்திற்காக) | 3 | 8 | 0 |
| G. சுப்பராய பிள்ளை, குடந்தை | 2 | 0 | 0 |
| N. P. சுந்தரம் பிள்ளை | 9 | 0 | 0 |
| வீ. பெரியநாயகத்தம்மையார் (பஞ்சாபகேசன் பல்லக்குவிழாவிற்கு முதற்பொருள்) | 50 | 0 | 0 |
| த. வே. உமாமகேசுவரம் பிள்ளை (தீபாவளிக்கு) | 5 | 0 | 0 |
| வ. மருதப்பா பிள்ளை ,, | 10 | 0 | 0 |

## கல்லூரியின்
## ௪௰ட-வது ஆண்டுவிழா நன்கொடை வரவு

### தஞ்சாவூர்

திருவாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| A. பொன்னுசாமி நாடார் | 10 | 0 | 0 |
| இராவ்சாகிபு A. Y. அருளானந்தசாமி நாடார் | 5 | 0 | 0 |
| L. S. M. சண்முக சுந்தரம் பிள்ளை | 5 | 0 | 0 |
| V. பூவராகவ அய்யங்கார் M.L.A. | 5 | 0 | 0 |
| K. நடராசன் B.A., B.L. | 5 | 0 | 0 |
| R. விசுவநாதம் பிள்ளை (Engineer P.W.D.) | 5 | 0 | 0 |
| N. P. சுந்தரம் பிள்ளை (Engineer D.B.) | 3 | 0 | 0 |
| K. விசுவநாத பிள்ளை | 3 | 0 | 0 |
| A. Y. S. பரிசுத்தம் | 2 | 0 | 0 |
| நா. கந்தசாமி பிள்ளை (Rtd. Engineer) | 2 | 0 | 0 |
| பாப்பண்ணுபிள்ளை & சன்ஸ் | 2 | 0 | 0 |
| A. S. கைலேகுரு | 2 | 0 | 0 |
| T. இராதாகிருட்டின நாயுடு B.A., B.L. | 1 | 0 | 0 |
| Dr. K. அனந்தராமன் | 1 | 0 | 0 |
| L. K. பிராணதார்த்திகரம் பிள்ளை | 1 | 0 | 0 |
| T. A. சிவசங்கரம் பிள்ளை | 1 | 0 | 0 |
| T. S. சபாபதி பிள்ளை B.A., | 1 | 0 | 0 |
| T. S. நந்திகேசுவரம் பிள்ளை | 1 | 0 | 0 |
| T. B. கிருட்டினசாமி பிள்ளை | 1 | 0 | 0 |
| K. நடராச சுந்தரம் | 1 | 0 | 0 |
| இராவ்சாகிபு Dr. V. P. V. நாயுடு | 1 | 0 | 0 |
| K. T. பாலசுப்பிரமணிய அய்யர் B.A., B.L., | 1 | 0 | 0 |
| T. K. இராமன் (Electrical Engineer) | 1 | 0 | 0 |
| A. பால் B. A., L. T. | 1 | 0 | 0 |
| வித்துவான். அ. வடிவேலர் | 1 | 0 | 0 |
| V. சாரங்கபாணி நாயுடு B.A., L.T., | 0 | 8 | 0 |
| K. S. மணி அய்யர் | 0 | 8 | 0 |
| K. பாலகிருட்டினன் B.A., L.T., | 0 | 8 | 0 |

### பள்ளியக்கிரகாரம்

| | | | |
|---|---|---|---|
| நீ. கந்தசாமி பிள்ளை | 5 | 0 | 0 |

திருவாளர்கள்

கரந்தை

| | | | |
|---|---|---|---|
| Dr. L. சொக்கலிங்கம் பிள்ளை | 2 | 0 | 0 |
| N. A. வர்த்தமான முதலியார் | 2 | 0 | 0 |
| V. மருதப்பா பிள்ளை | 2 | 0 | 0 |
| P. சுந்தரமையர் | 1 | 0 | 0 |
| V. K. அருணாசலம் பிள்ளை | 1 | 0 | 0 |
| R. N. கனகசபை பிள்ளை | 1 | 0 | 0 |
| K. S. கிருட்டினசாமி அய்யர் | 1 | 0 | 0 |
| T. A. வாசுதேவ பிள்ளை B.A., | 1 | 0 | 0 |
| T. A. பாலகிருட்டின பிள்ளை B. A., | 1 | 0 | 0 |
| J. அய்யாதுரை நயினார் | 1 | 0 | 0 |
| A. P. பக்கிரிசாமி பிள்ளை | 1 | 0 | 0 |
| A. P. கோவிந்தசாமி பிள்ளை | 1 | 0 | 0 |
| K. சந்திரகாச நாட்டார் | 1 | 0 | 0 |
| A. சிங்காரவேல் உடையார் | 1 | 0 | 0 |
| V. சுப்பிரமணியன் B. A. | 1 | 0 | 0 |
| G. நாகரத்தனம் பிள்ளை | 1 | 0 | 0 |
| R. இராமச்சந்திர அய்யர் | 1 | 0 | 0 |
| V. S. சிதம்பரம் பிள்ளை | 1 | 0 | 0 |
| R. மாணிக்கவாசகம் பிள்ளை | 1 | 0 | 0 |
| T. V. இரத்தனசாமி பிள்ளை | 1 | 0 | 0 |
| A. பழனியப்பபிள்ளை | 1 | 0 | 0 |
| N. வேங்கடசாமி நாயுடு | 1 | 0 | 0 |
| N. L. சின்னகிருட்டின நாயுடு | 1 | 0 | 0 |
| N. L. வரதராசலு நாயுடு | 1 | 0 | 0 |
| N. L. B. ஆழ்வார்சாமி நாயுடு | 1 | 0 | 0 |
| சிவ. சண்முகசுந்தரம் | 1 | 0 | 0 |
| P. V. இராமையர் | 1 | 0 | 0 |
| R. M. T. மாகாளியா பிள்ளை | 1 | 0 | 0 |
| K. மாணிக்கம் பிள்ளை | 1 | 0 | 0 |
| G. இராமசாமி பிள்ளை | 1 | 0 | 0 |
| N. பாஷியம் நாயுடு | 1 | 0 | 0 |
| I. K. சிவஞானம் | 1 | 0 | 0 |
| நாராயணசாமி பிள்ளை | 1 | 0 | 0 |
| P. சண்முகம் பிள்ளை | 1 | 0 | 0 |

திருவாளர்கள் **கரந்தை**

| | | | |
|---|---|---|---|
| N. A. நேமிநாத முதலியார் | 1 | 0 | 0 |
| A. சினகுமார முதலியார் | 1 | 0 | 0 |
| T. K. வேங்கடசாமி நாயுடு | 1 | 0 | 0 |
| இராவ்சாகிபு I. குமாரசாமி பிள்ளை B. A., | 1 | 0 | 0 |
| K. நாகநாத அய்யர் (க. த. ச. க.) | 1 | 0 | 0 |
| சிவ. குப்புசாமி ,, | 1 | 0 | 0 |
| கோ. இரத்தனம் பிள்ளை ,, | 0 | 8 | 0 |
| T. A. சுப்பிரமணிய அய்யர் | 0 | 8 | 0 |
| K. இரத்தனம் பிள்ளை | 0 | 8 | 0 |
| ந. பழனிவேலன் | 0 | 8 | 0 |
| க. நா. சின்னையர் | 0 | 4 | 0 |
| தமிழ் அன்பர் | 0 | 2 | 0 |

**கள்ளப்பிரம்பூர்**

| | | | |
|---|---|---|---|
| K. நல்லமுத்து நாட்டார் | 5 | 0 | 0 |

**குளமங்கலம்**

| | | | |
|---|---|---|---|
| S. கணபதி | 0 | 4 | 0 |

**திருவையாறு**

| | | | |
|---|---|---|---|
| கரந்தைக் கவியரசு. R. வேங்கடாசலம் பிள்ளை | 1 | 0 | 0 |
| S. பொன்னுசாமி பிள்ளை | 1 | 0 | 0 |

**அய்யம்பேட்டை**

| | | | |
|---|---|---|---|
| P. வேலாயுதம் பிள்ளை B.A., L.T., | 0 | 8 | 0 |

**பாபநாசம்**

| | | | |
|---|---|---|---|
| M. சோமசுந்தரம் பிள்ளை B.A., L.T., | 1 | 0 | 0 |
| S. தங்கவேல் பிள்ளை B.A., L.T., | 1 | 0 | 0 |
| சாமி. சிதம்பரனார் | 1 | 0 | 0 |
| R. ஏகாம்பரனார் | 0 | 12 | 0 |

**கும்பகோணம்**

| | | | |
|---|---|---|---|
| N. இராசரத்தனம் பிள்ளை B.E,, | 5 | 0 | 0 |
| R. கந்தசாமி மூப்பனர் B.A., B.L,, | 1 | 0 | 0 |

திருவாளர்கள்

பம்பாய்

| | | | |
|---|---|---|---|
| K. தியாகராச பிள்ளை B.A., A.I.M.E.E., | 3 | 0 | 0 |

கோடம்பாக்கம்

| | | | |
|---|---|---|---|
| M. A. கனகசபை முதலியார் | 2 | 0 | 0 |

கண்டர்கோட்டை

| | | | |
|---|---|---|---|
| R. புருடோத்தமனார் | 1 | 0 | 0 |

பட்டுக்கோட்டை

| | | | |
|---|---|---|---|
| தியாகசம்பந்தம் | 0 | 8 | 0 |

மதுரை

| | | | |
|---|---|---|---|
| C. வேதாசலம் பிள்ளை B.A., B.L., | 0 | 5 | 0 |

உரத்தநாடு

| | | | |
|---|---|---|---|
| M. கோவிந்தராச நாட்டார் B.A., L.T., | 3 | 0 | 0 |
| சாமி. வேலாயுதம் பிள்ளை B.A., L.T., | 2 | 0 | 0 |
| S. பஞ்சநதம் பிள்ளை M.A., L.T., | 2 | 0 | 0 |
| T. R. சிவசாமி பிள்ளை | 1 | 0 | 0 |
| S. பாலசுப்பிரமணிய முதலியார் B.A., L.T., | 1 | 0 | 0 |
| N. கோவிந்தராச பிள்ளை B.A., L.T., | 1 | 0 | 0 |

கடம்பூர்

| | | | |
|---|---|---|---|
| G. இலட்சுமணப் பிள்ளை B.A. | 1 | 0 | 0 |

இளங்காடு

| | | | |
|---|---|---|---|
| T. N. இராசகோபால நாயுடு | 0 | 4 | 0 |

ஒரத்தூர்

| | | | |
|---|---|---|---|
| கோவிந்தசாமி மூவரையர் | 2 | 0 | 0 |

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.